KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

3-OCT 1931

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 0 0

காரியால்யம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 வரு ஆகஸ்டு மீ 20உ [No. 33.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 641
2. ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 643
3. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 646
4. சிதம்பரதேவர் சரிதம்—1 உப்பரிகை
Dr. V. S. அருணசலம்பிள்ளை 648
5. கம்பராமாயணம் (தைலமாட்டு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 650
6. யாப்பிலக்கணம்
(பஃறொடைவெண்பா - வெண்பாசுறு.) 653
7. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-91—100)
K. இராமரத்நம் ஐயர் B.A. 655
8. குலத்தாலழுங்கல், கும்பகோணக்கொசு
S. இராமச்சந்திரன் B. A. 656
9. வர்த்தமானம். 659

கலாநிலயம்

188931

உயிருடை யுயர்வு.

உயர்த்துவதற்குரியது உயிர்நிலையே என்பதைத்தெரியும் வகையற்ருர், உடல் நசைக்கியன்றவைகளைப் பெருக்குவதே கருமமெனக் கைகாட்டிப் பேசுகின்ற கூக்குரலால், விளையும் விபரீதங்களினிடையே, அகப்பட்டு அழிகின்றது பாவம், இக்கால மானுடவாழ்க்கை. இக்கட்டுரையின் நிமித்தம் முன்னதை உயிர்வாழ்க்கையென்றும் பின்னதை உடல்வாழ்க்கையென்றும் ஒருவாறு பாகுபடுத்திப் பேசலாம். பயனும் பொருளும் எதுவாயினும் உடல்வாழ்க்கையை உயர்த்துவது என்னும் அக்கருத்து எதனைக் குறிக்கின்றதெனப் பாமரர்களும் அறிவார். மற்று அதுமட்டும் அறிந்து உயிர்வாழ்க்கை உயர்வது என்பதன் கருத்தும் வகையும் இன்னதென நினைக்கவும் உணரவும் வல்லர் அல்லாதாரெல்லாம், அன்னூர் கற்றவரென்னும் பட்டம் பெற்றவர்களாயினும், இறுதியில்பேதைப் பாமரர்களே யாவர்

மண்கலத்தில் உண்டவனொருவன் தன்முயற்சியால் வெண் கலத்தில் உண்ணக்கூடியவனானவுடன் அவனை வாழ்க்கைவகையில் உயர்ந்துவிட்டவனென அழைக்கும் இக்கால உலகம். இதனை ஒரடையாளமாக வைத்துக்கொண்டு, ஊண் உடை உறைவிடம் ஏவல் வாகனம் முதலிய பல வகைகளில் உயர்வடைவதை ஒரு பெரும் பொருளாய்க் கொண்டாடுவார். ஆறுமுழத் துணியை நேரே செய்தவாங்கே உடுப்போனைக்காட்டிலும், அதனைக்கிழித்துத் தைத்துத் தன் கைகால்களைப் புகுத்திக்கொள்ளப் பழகியவன் வாழ்க்கைவகையில் உயர்ந்தவனென்றுரைக்கப்படுகின்ருன். அற்றைநாள் வேலைமுடித்தும் தனது இல்லம்சேர்ந்து மனைவி மக்களுடன் அகமகிழ இனிய உரையாடி இருப்பதினும் மாலைதோறும் நாடகம் சினிமா முதலிய காலப்போக்கிடங்களுக்குப் பொருள்கொடுத்துச் செல்லக்கூடியவனானவன் தன் வாழ்க்கையை ஒருபடி உயர்த்திக்கொண்டவனெனும்மதிப்பிற்குரியவன் என்றுசிறிதும் வெட்கமின்றி இங்கிலாந்து முதலிய மேனுடுகளில் விளம்பிக்கொள்கின்றனர். இதனுல் அப்படிக் கருதும் இந்தியர்கள் இலரென்று எண்ணவேண்டா. இப்படியே எவ்விதத்திலோ முன்னையினும் மெல்லமெல்ல அதிகம் செலவுசெய்யும் வகை எய்துவார் எல்லாரும் உயர்வு அடைந்துகொண்டு வருவதாகக் கருதப்படுவது இந்தக் கலிகாலப் பெருமைகள் பலவற்றுள் ஒன்று. இவ்விடயத்தில் இங்கிலாந்து முதலிய மேனுடுகளுக்கும் தற்கால இந்தியர்க்கும் பொதுவில் பேதம் பெரிதில்லை. இந்திய ஜனத்தலைவர்களாய்ப் பல்வேறு இயக்கங்களில் ஈடுபட்டிருப்பவர்களிற் பலர், ''ஐயைவைய, அன்று அன்று இதுவன்று, எம் நோக்கம். இவ் வுடல்நசைக்குரிய விடயங்களும், மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று யாம் கொள்கின்றேமாயினும், அதற்கும் மேலாய

ஒரு தத்துவ வாழ்க்கையே (Spiritual) உயர்ந்ததென மதிக்காதவர் அல்லேம். யாம் பாடுபடுவது பெரிதும் அச் சீரிய வாழ்க்கையை முன்னிட்டே,'' என்பர். இவ்வாறு அவர் பேசுவது நெஞ்சறிந்த பொய்யன்று. ஆயினும் பொருள் தெரியாப் பாவமொன்றே அதனைச் சூழ்ந்துகொண் டிருக்கின்றது. இப்படி உரைப்பவர்களை எதிரே வைத்துக்கொண்டு, ''நீவிர் முக்கியமென உரைப்பதற்கேனும் ஒருப்படும் அதன் இலக்கணமும் அதனை எய்துதற்கென்று முயற்சிசெய்யும் முறைகளின் நேர்மையும் இன்னதென்று தர்க்கம்பிறழாமல் சற்றே சொல்லுவீர்,'' என்னவலிந்து அவரைக் கேட்டால் பெரும்பாலும் முன்னுக்குப் பின் முரணுனபலவாசகங்களைத் தொடுத்து வட்டமிடுவதில் தம்முடைய தெளிவின்மையைத்தாமேயுந்தேருமல் தீர்ந்துவிடுவார். இதுவெனெனில் அந்த உடல்நசை வாழ்க்கைக்கே உயிர்நிலைவாழ்க்கை யென வேறுபெயர் வைத்தழைத்தால் யாவும் வித்தியாசமாகிவிடும் என்றொரு மயக்கம் அவர்களை அறியாமலே பற்றிக்கொண்டிருக்கின்றது. இது எவ்வாறாயினும் ஆகுக. பேரெதுவாயினும் பேசுவார் கருத்து எதுவாயினும், உடல்நசை வாழ்க்கையை உயர்த்துவதன் முடிவு ஒன்றே. முன், கூழுக்கு உப்பில்லை என்று வருந்தியவன், பின்னர்ப் பாலுக்குச் சர்க்கரை இல்லையென வருந்துவதல்லால் இத்தகைய உயர்வும் முடிவும் வேறில்லை. அவ்வருத்தத்தை மனத்தினின்று அகற்றுவதற்குரிய நிலையே உயர்ந்தது.

உயிர்நிலை உயர்வடைவதன் இலக்கணத்தை முற்றிலும் உற்று உரைப்பது எளியதன்றெனினும் அதனை உணர்த்துவதற்குரிய குறிகள் சிலவற்றை எடுத்துக்கூற வியலுமென நினைக்கின்றோம். இக்குறிகளைக் கொண்டு அவரவர் தங்களைத்தாமே அளந்துகொள்ள இயலுமே யல்லாது பிறரிடத்தில் இதைச் செலுத்தி மதிப்பது மிகவரிது. நாம் முன் கல்சர் என்னும் தலைப்பின்கீழ் வரைந்துள்ள சில தலையங்கங்களில் சுயவாராய்ச்சியின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்தியது சிலருக்கு நினைவிருக்கலாம். ஒவ்வொருபோதும் அவரவர் தம்மையே வேறொருவர்போல் பாவித்து, தான் நினைப்பதும் சொல்வதும் செய்வதும் எத்தூரம் முரணின்றி இணங்கியிருக்கின்றனவென்று பக்ஷபாதமில்லாமற் பரிசோதித்து ஒரு நாள் எய்திய முடிவை மறுநாள் முடிவினோடு சீர்தூக்கப் பயின்று வருவார்க்குப் பின் இங்குக் காட்டப்படும் உயிர்நிலை வாழ்க்கை உயர்வதன் குறிகளைத் தெரிந்துகொள்ளல் அருமையாகாது. குடிக்கும் கூழிற்கு உப்பில்லையெனக் குறைகொண்டு அவ்வுப்பினை முயன்று பெற்றவன், உடல்வாழ்க்கையில் உயர்ந்தவன் என்றால், கூழிற்கு உப்பு இல்லை என்பதையே உணராதவன் உயிர்நிலை வாழ்க்கையில் ஒருபடி உயர்ந்தவனாகின்றான். கூழைப் பாலாக்கி, அப்பாலிற்குச் சர்க்கரையும் கொணர்ந்துவிட்டவன் உடல்வாழ்க்கையில் உயர்ந்தானென்னின், உப்பில்லாக் கூழினை உடன் உண்ண விருந்தினரை விழைவோன் உயிர்வாழ்க்கையில் உயர்ந்தவனாகின்றான். தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிது என்று அகமகிழ்வோன் உடல்வாழ்க்கையில் உயர்ந்தவன்; தம்மின் கற்றாரை நோக்கிக் கற்[...]வல்லுநர், ஏற்[...] இவர்க்கு என்று கருத்[...] உயிர்வாழ்க்கையில் உயர்ந்தவன். வர்த்தமானப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு, வருட ஏற்றுமதி இறக்குமதிக் கணக்குகளைக் கருத்துடன் பார்த்து அங்காந்திருக்கக் கற்றவன், இக்காலப் போக்கின்படி உயர்ந்தவனாகக் கருதப் படுபவனில் ஒருவனெனின், கம்பராமாயணம் திருக்குறள் போன்ற நூலின்கண் ஓர்செய்யுளையேனும் அதற்கு அறிவுடைய பெரியோர் அருமையாய் விளக்கும் நுண்ணிய பொருளையேனும் ஓதியவுடன் உள்ளமுருகி அதனோடுசென்று கலக்கின்ற சிந்தைவாய்ந்தவன் உயிர்வாழ்க்கையில் உயர்ந்தவனாகின்றான். ''எத்தனை பெரியது என் நிலம், எத்தனை அதிகம் என் பொருள்'', என்றுகணித்து மகிழ்வார் எண்ணிறந்தோர். மற்று எத்தனை பெரியது இவ்வானம்; அதனில் கணக்கில்லா விண்மீன்கள் எத்தனை எத்தனை என உண்மையில் வியந்து உள்ளம் எவனுக்குக் கரைந்து உருகுகின்றதோ அவன் உயிர்வாழ்க்கையில் உயர்ந்தவன். ஓர் பூங்கிளையின் அசைவிலே ஒரு குயிலின் குரலிலே, ஒரு குழந்தையின் அழகிய சிரிப்பிலே, உத்தமர் குணத்திலே, உள்ளந்துறந்து தன்னையறியாமலே மெய்பொடித்து உவகை பொங்கக் கண்ணின்று நீர்பெருகுமாயின், அது அவனுடைய உயிர் வாழ்க்கையின் உயர்வினைச் செவ்விதின் அளந்து காட்டும். இப்படியே அவரவர் அனுபவத்திற்கு ஏற்றவாறு பற்பல குறிகளால் உயிர்வாழ்க்கை உயர்கின்றதோ இல்லையோ, என்னுந் தன்மையைத் தேர்ந்து கொள்ளல்சுலபமானதே. இப்படி உயர்வடைந்த வாழ்க்கை எய்துமிடம் கடவுளென்று கூறவும் வேண்டுமோ! இவ்வகையில் உயிர்வாழ்க்கையை உயர்த்த வல்ல கருவி கலைகளே அல்லாற்பிறிதொன்று இல்லை. எவ்வாறு கலைகள் இதற்குக் கருவியாகுமென்பதை முன் 1929-வது ஆண்டில் கலைகளேகதி என்னும் தலைப்பின்கீழ் வரைந்துள ஆறு தலையங்கங்களில் விரிவாக விளக்கியிருக்கின்றோமாதலின் மீண்டும் அவைகளை ஈண்டெடுத்து இயம்பல் மிகையாகும். கலாநிலய வாசகர்கள் அக்கட்டுரைகளை ஞாபகத்திற் கொள்ளுதல் நலம்.

உயிர் நிலைவாழ்க்கை உயர்வடைதற்குரிய கருவிகளையும், அவ்வாறு உயர்வடைந்து வருகின்றதென்பதைக்காட்டவல்ல குறிகளையும் அறிந்த வளவில், அவ்வுயர்நிலையின் தத்துவவுணர்ச்சி அவரவர் உள்ளத்தில் உதிக்கலாம். உயிர் அன்பாகி அவ்வன்பு சிவமாகும் இரசவாதவித்தை இதனில் அடங்கியுளது. தாயினை, ''நீ மகவின்பால்வைத்துள்ள அன்பு என்பது யாது'' என வினவுங்கள். ''நீ கொண்டுள உயிர் யாது'' என்று உயிரோடிருப்பவன் ஒருவனைக் கேளுங்கள். ''நீ வழிபடும் அக்கடவுள் யாது'' என்று ஒரு பக்தனைக்கேளுங்கள். என்ன விடையியம்ப இயலும்! விடையொன்று அருமையாதலே, உயிர் அன்பு கடவுள் என்னும் அம்மூன்றும் ஒன்றென்பதற்குச் சாலுங்கரி. இந்நெறியில் உயர்வதின்றி ஒருமனிதன் உண்பதெல்லாம் பிண்டம், உடுப்பதெல்லாம் மூகவாசி, அவன் உடலே ஒன்றுமில்லாஉமி. அன்னார் வாய்மொழி யெல்லாம் அவலக் கூக்குரல். சிரிப்பெல்லாம் சிந்தையிற் சேராத சோகம். இவர் செய்யுஞ் சீர்திருத்தங்க ளெல்லாம் சுடுகாட்டைப் பெருக்கி மெழுகி நிணவிளக்கேற்றி வைப்பதையே ஒக்கும்.

சென்னை-600 008

ஆண்டாள்

I. பிறப்பும் இளமையும்

[631-வது பக்கத் தொடர்ச்சி]

4. ஆண்டாள் இளமைப்பருவ வொழுக்கம்.

அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருப்பது * இவ்வம்மையார் வழக்கமென்பது நாம் முன்னரே கண்டோம். அவ்வாறு எழுவது கோதையாருக்குப் படுக்கைச்சுகக் குறைவினு லன்று. ''குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் காட்டின்மேல், மெத்தென்ற பஞ்ச சயனத்தில்'' நித்திரைசெய்பவராயினும், ஆசாரவொழுக்கம் யாதும் பழுதுபடாதவராதலால், அதிகாலையில் வீதிவாயில்களை விளக்கித் தண்ணீர் தெளித்து வெண்மணற்கொண்டு† தெருவினை அலங்கரித்து அருணோதயத்திற்கு முன்பு ‡ஸ்நானத்திற்குப் பொய்கைத் துறைக்குச் செல்வது வழக்கம்.

பொய்கைக்கரைக்குச் சென்றதும், நித்திய கருமங்களைச் செவ்வனே முடித்து, நீர்விளையாட்டில் சற்று அயர்ந்துஊருக்குமீள்வார். அக்காலத்தில் ஊர்ப் பொய்கை வெகு அருகிலிராது *. ஆதலால் உதயம் தடாகத்திற்கு நடந்து அங்குக் குளித்துமீள்வதே, தேகத்திற்கு மிகவும்ஆரோக்கியத்தைத் தருமென்பர் ஐரோப்பியரும். அவ்வாறே அம்மையாரும் அழகிற் சிறந்துவிளங்கியதாய்க் காண்கின்றோம் †. இயற்கை யழகுடன் அம்மையாருக்குச் செயற்கையழகு செய்துகொள்வதற்கும், இடம் ‡ பொருள் $ ஏவல் அமைந்திருந்தன. செங்கச்சும் கோலச்சிற்றாடையுமணிந்து மைதீட்டிச்¶ சாந்தணிந்து ''செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல்'' தன் திருமாளிகையில்உலவிவருவார். காதிற்பொற்குழையும் † கையில் வளையும் திகழ்குழல் தாழத் திங்களையொத்த திருமுகத்துடன் பட்டர்பிரான் இல்லத்தை அணிபெறச் செய்தனர். ஒரு பக்கம் அழகும், மற்றொருபக்கம் முத்தமிழ்க்கல்வியும் ‡ பின்னொருபக்கம் பெண்ணுவாறியவேண்டிய போனகத் தொழில்களும் $ இவ்வமையாருக்கு எழிலுட

* சீசு சீசென் றெங்கும் ஆனைச் சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய்!

திருப்பாவை 7.

† வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன் முன்னம் துறைபடிந்து
முள்ளுமிலாச் சுள்ளி யெரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல்வண்ண னென்பதோர் பேரெழுதி
புள்ளினை வாய்பிளந் தானென்பதோர்
இலக்கினிற் புகவென்னை யெய்கிற்றியே.

1-வது திருமொழி (தையொரு திங்கள்) 2.

‡ கோழி யழைப்பதன் முன்னம்
குடைந்து நீராடுவான் போந்தோம்
ஆழியஞ் செல்வ னெழுந்தான்
அரவணைப் பற்றிமேற் கொண்டாய்!
ஏழைமை யாற்றவும் பட்டோம்
இனியென்றும் பொய்கைக்கு வாரோம்
தோழியும் நானுந் தொழுதோம்
துகிலைப் பணித்தரு ளாயே.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) 1.

* நீரிலே நின்றயர்க்கின்றோம் நீதியல்லாதன செய்தாய்
ஊரகம் சாலவும் சேய்த்தால் ஊழியெல்லாமுணர்வானே!
ஆர்வமுனக் கேயுடையோம் அம்மனைமார் காணிலொட்டார்
போரவிடாயெங்கள் பட்டைப் பூங்குருந் தேறியிராதே.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) 7.

† ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா விட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்கா ளாவிகாத் திருப்பனே.

8-வது திருமொழி (விண்ணீலமேலாப்பு) - 3.

‡ கன்னியரோ டெங்கள்நம்பி கரியபிரான் விளையாட்டைப்
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்தபுதுவையர் கோன்பட்டன் [கோதை
இன்னிசையால் சொன்னமாலை ஈரைந்துவல்லவர் தாம்போய்
மன்னியமா தவனோடு வைகுந்தம் புக்கிருப்பாரே.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) - 10.

$ i. நாறுந றும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்குநான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்துபராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையா னின்றுவந்திவை கொள்ளுங்கொலோ?

¶ ii இன்றுவந் தித்தனையும் அமுதுசெய்திடப் பெறில்நான்
ஒன்றுநூறாயிரமாக் கொடுத்துப்பின்னும் ஆளும்செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்றபி ரானடியேன் மனத்தேவந்து நேர்படிலே.

9-வது திருமொழி (சிந்துரச் செம்பொடி) - 6&7.

* வைத்து வாழ்வீர்கள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்கால நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்

திருப்பாவை 2.

† சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்''

[ஷை 27 வரி 4-5.

‡ பின் அத்தியாயத்தில் இதை விவரமாய்க் காணலாம்.

$ காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்
கட்டியரிசி யவலமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மத னேயுன்னை வணங்கு கின்றேன்
தேயமுன் னளந்தவன் திரிவிக் கிரமன்
திருக்கைக ளாலென்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடை வயிறுமென் தடமு லையும்
தாரணியில் தலைப்புகழ் தாக்கிற் றியே.

1-வது திருமொழி (தையொருதிங்கள்) 7.

னமைந்தன. நமது நாட்டில் இக்காலத்தில் தூங்கும் பெண்பிள்ளைகள்போல், அவர்காலத்திலு மிருந்தன ராதலால், அத்தகைய பெண்களை மிகவும் இகழ்ந்து கண்டனஞ் செய்தனர் ¶. இவர்செய்த பாக்களில் ஆங்காங்கு யாவருக்கும்வேண்டிய நல்லொழுக்கங்களும் ஊன்றிப் பகரப்படும்.

---

2. கோதையார் தமிழ்க் கல்வியும் கவித்திறமையும்

1. அம்மையார் இலக்கியப் பயிற்சி

நாச்சியார் தன்தமிழ் சங்கத்தமிழென்று மொழிந்தார். யாதொன்றினும் இத்தமிழ் சங்கத்தமிழுக்குப் பின்வாங்கிய தன்று. சங்கத்தார்கால இலக்கியஇலக்கணங்களை இவ்வம்மையார் பரிசோதித்ததற்கு அகச்சான்றுகள், திருப்பாவையினும் நாச்சியார்திருமொழியினும் ஆங்காங்கு எடுத்துக் காட்டலாகும். அவற்றுள் சிலப்பதிகாரச் சரித்திரத்தில் எடுத்துக்காட்டும் நாடகத் * தமிழிலக்கணமு மறப்பத்தினி யிலக்கணமும் † இவர் நன்குணர்ந்தனர். கண்ணகியின் செய்கை தானும் செய்யக்கூடுமென்றும், தனதுரிமையைத் தாராத "கொள்ளிக் குறும்பன் கோவர்த்தனன்" மீது தான் கோபத்துட னிருப்பதாகவும் கூறுகின்றார்.

இதன்றியும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஆய்ச்சியர் குரவையே ‡ நாச்சியார் திருமொழிகளிற் பன்முகமாய்ப் $ பரவிய தென்னலாம். சிலப்பதிகாரச் சொற்றொடர்களும் ஆங்காங்கு நாச்சியார் திருமொழியினும் * திருப்பாவையினும் விரவி வந்திருப்பதைக் காண்க. குயிற்பத்து கூடற்குறிப்பு முதலியவற்றில் முன்னிலைப்பரவலும் படர்க்கைப்பரவலும் காண்கின்றோம். ஆய்ச்சியர்குரவைப் பாட்டும் வரிப்பாட்டுகளும் நாச்சியார் பாசுரங்களில் சில இடங்களில் எதிரொலி எழும்பக் காண்கின்றோம்.

இதன்றியும் சங்க இலக்கணமான தொல்காப்பியத்தில்கோதையார்கரைகண்டவர். அகப்பொருளிலக்கணமும் புறப்பொரு ளிலக்கணமும், உலக நடையான உடையில் மனைவாக்குக் கதிதமான பேரின்பவீட்டை இவர் பதிகங்களிற் காட்டப் பயன்படுகின்றன. புறப்பொருளில், வெட்சியில், கரிக்குருவியெழுவது ஆநிரைப் பகைவர்வந்து கவரும் தூர்ச்சகுனமாய் எடுக்கப்படும். மாலைமொழிக்குத் திருமால் வரவு பிறவித்துன்பங்களைக் கொள்ளைகொள்ளுமென்னும் செய்தியைச் சொல்லுந் தொழிலைக் கரிக்குருவிகளுக்கு * அவ்வம்மையார் தந்தனர் போலும்:—

காலையெழுந் திருந்து கரிய
குருவிக் கணங்கள்
மாலின்வரவுசொல்லி மருள்
பாடுதல் மெய்ம்மை கொலோ!
சோலைமலைப்பெருமான் துவ
ராபதி யெம்பெருமான்
ஆலினிலைப்பெருமான் அவன்
வார்த்தையுரைக்கின்றதே.

9-வது திருமொழி (சிந்தூரச் செம்பொடி) 8.

இவ்வாறு அகப்பொருளாயினும் சரி, புறப்பொருளாயினும் சரி, எத்துறையிலும் இவ்வம்மையார் தொட்ட பதமெல்லாம் † பொன்னாய்ப் பொலிந்தன.

¶ ....பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில் தந்தானோ?".

திருப்பாவை 10.

* கார்த்தண் மலக்கண் ணென்னும்
நெடுங்கயிறு படுத்தி யென்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்
ஈசன் தன்னைக் கண்டீரோ?
போர்த்த முகத்தின் குப்பாய
புகர்மால் யானைக் கன்றேபோல்
வீதி யார வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே.

14-வது திருமொழி (பட்டி மேய்ந்து) 4

† உள்ளே யுருகி நைவேனை
உளளோ இலளோ வென்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன் றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட் டவன் மார்பி
லெறிந்தென் னழலைத் தீர்வேனே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்) 8-

‡ மாயவன்றம் முன்னிறெடும் வரிவளைக்கைப் பின்னை [யெனுங்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
வாய்வளைச்சீர்க்கடிபெயர்த் திட்டசோதையார் தொழுதேத்த
காதரு மன்றத்தாடும் குரவையோ தகவுடைத்தே.

ஆய்ச்சியர் குரவை.

$ அழிலுந் தொழிலு முருக்காட்டான்
அஞ்சே லென்று னொருவன்
தழலி முழகிப் புகுந்தென்னைச்
சுற்றிச் சுழன்று போகானல்

தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே
நெடுமா லூதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர்கொண்டு
குளிர முகத்துத் தடவீரே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்) 5.

* இறமென் சாய னுடங்க நுடங்கி
யறவை யொளித்தான் வடிவென் கோயா
மறவை யொளித்தா னயர வயரு
நறமென் சாயன் முகமென் கோயாம். (1)
வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புணலு
ணெஞ்சங் கவர்ந்தா னிறையென் கோயா
நெஞ்சங் கவர்ந்தா னிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம். (2)

தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தான் முகமென் கோயாம்
கையி லொளித்தான் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்.

என்னும் (ஆய்ச்சியர் குரவை)பாட்டுடன் மேல்வரும் நாச்சியார் திருமொழியை நோக்குக:—

மாசுடை யுடம்பொடு தலையுலறி
வாய்ப்புறம் வெளுத்தொரு போதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா
நோற்கின்ற நோன்பினைக் குறிகொள்கண்டாய்
பேசுவ தொன்றுண்டிங் கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத் தாக்கும்வண்ணம்
கேசவ நம்பியைக் கால்பிடிப்பா
ளென்னுமிப் பேறெனக் கருளுகண்டாய்.

முதல் திருமொழி (தையொருதிங்கள்) 8.

* இப்பறவையைக் காரியென்பர் சங்கத்தார்.

ஐந்திணைகளிலும் அகப்பொருட்கருவியால் ‡பேரின்ப இலக்கணத்தையே $விளக்குவாராதலால், இவ்வம்மையார் பதிகங்கள் யாவும் அளவற்ற ஆழ்ந்த பொருளுடையனவாய் ¶ ஆராய்ச்சிசெய்பவர்க்கு இன்பம் பயக்கும். அவற்றுள் சில பின்னர்க் காண்க.

சங்கத்தார்காலத்திற்குப் பிற்பட்ட இலக்கியங்களில் கோதையர் நன்றாய்க் கையாண்டவை திருவாசகமும் தேவாரமும் என்பதற்கு அகச்சான்றுகள் பலகாணப்படுகின்றன. ஆண்டாள் திருப்பாவையும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவையும் ஒரே தன்மையான நடையிலும் யாப்பிலும் அமையப்பெற்றிருக்கின்றன. திருவெம்பாவை 20பதிகங்களமையப்பெற்றது. திருப்பாவை 30பதிகங்கள் பெற்றதுமன்றி "முனைப்பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளைக் கணவரெனக் குறிப்பதுபோல், கடவுளின் மங்களாகாரமான குணங்களைக்கூறுவதும் சரியைமார்க்கத்தைப் போதிப்பதும் ஆவதுடன், ஆசாரசீர்திருத்தங்களையும் குறிக்கும். திருப்பாவையில் ஒருபதிகமும், திருவெம்பாவையில் ஒருபதிகமும் * ஒன்றன்பின்னொன்றை வைத்துக் காண்போம்:—

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர் அவளையெ ழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்!

திருப்பாவை - 9.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் [தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி! பரிசேலோ ரெம்பாவாய்

திருவெம்பாவை - 1.

திருவெம்பாவையில் சற்றுக்குறிப்பாய்க் கூறியவைகளை வெளிப்படையில் கடூரமாய்ச் "செவிடோ" "ஊமையோ"எனத்திருப்பாவையில்வத்தன. திருப்பாவையில்* முதற்செய்யுள் மார்கழித்திங்களில் நீராடுவதைக் குறிப்பிடுகின்றது. அவ்வாறே திருவெம்பாவையின் திருக்கடைக்காப்பும் மார்கழியைக் காட்டுகின்றது. மணிவாசகப்பெருமான் காலவரையறையில் முற்பட்டிருப்பதால் அவர் திருப்பதிகங்கள், பின்வந்த ஆண்டாள் திருச்செவிகளிற்புகுந்திருக்குமென்று எண்ணல் வேண்டும்.

இதன்றியும் திருவாசகத்தில் திருப்பொற் சுண்ணத்தின் † யாப்பே, நாச்சியார் முதல் திருமொழியாகிய தையொருதிங்களிலும்,12-ம்திருமொழியாகிய மற்றிருந்தீரிலும் பொலியப்பெற்றிருப்பதைக்காண்க. திருச்சாழல் நடையில், வினு விடையாய்ப் பதினொன்காவது திருமொழியாகிய பட்டிமேய்ந்து என்னும் ஆண்டாள் திருப்பதிகமும் விளங்கும். அகப்பொருளிலக்கணத்தில், திருக்கோவையாரே ஆண்டாள் பதிகங்களாய்க் கண்ணனைக் காட்டுகின்றன எனினும் பொருந்தும்.

---

† சலங்கொண்டு கிளர்ந் தெழுந்த
தண்முகில்காள் மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே
நிரந்தேறிப் பொழிவீர்காள்
உலங்குண்ட விளங்கனிபோல்
உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்கென்
நடலைநோய் செப்புமினே.

8-வது திருமொழி (மேகவிடுதூது) 6.

‡ கருவிளை யொண்மலர்காள் காயாமலர் காள்திருமால்
உருவெளி காட்டுகின்றீர் எனக்குய்வழக் கொன்றுறை [யீர்!
திருவிளை யாடுதிண்டோள் திருமாலிருஞ் சோலைநம்பி
வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே?

9-வது திருமொழி (சிந்தூரச்செம்பொடி) 3

$ இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றுவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனக்கண்டேன் தோழிநான்.

6-வது திருமொழி (வாரணமாயிரம்) 8.

$ மாமியார் மக்களே யல்லோம்
மற்றுமிங் கெல்லாரும் போந்தார்
தூமலர் கண்கள் வளரத்
தொல்லையி ராத்துயில் வானே
சேமமே யன்றிது சாலச்
சிக்கென்ன நாமிது சொன்னோம்
கோமள வாயர்கொ ழுந்தே
குருந்திடைக் கூறை பணியாய்.

3-வது திருமொழி (கோழி யழைப்பதன்) 8.

* இப்பதிகங்கள் "எம்பாவாய்" என்னும் கூன் பெற்ற பஃறொடை வெண்பாக்களாம், அதனாலேதான் இவை முற்றும் வெண்டளை பிறழா திருப்பதைக் காண்க.

* மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர். திருப்பாவை 1.
"போற்றியா மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்"

திருவெம்பாவை 20.

† காசணி மின்களு லக்கையெல்-லாம்
(விளச்சீர்) (விளச்சீர்) (விளச்சீர்) + (நேர்)
காம்பணி மின்கள்க றையுற-லை—
விளச்சீர் (மாங்காய்ச்சீர்-விளச்சீர்) (விளச்சீர்) + (நேர்)
தையொரு திங்களும் தரைவிளக்கி—திருவாசகம்
(விளச்சீர்) (விளச்சீர்) (விளச்சீர்) நேர்
தண்மண் டலமிட்டு மாசிமுன் னாள்
(விளச்சீர்) (மாங்காய்ச்சீர்) (விளச்சீர்) + (நேர்)
மற்றிருந் தீர்கட்க றியலா கா
மாதவ னென்பதொ ரன்புதன்-னை 12வதுதிருமொழி
(விளம்) (விளம்) (விளம்) (நேர்)

முதல் திருமொழி.

மேற்பாசுரங்களின் யாப்புக்களின் அபேதம் காண்க.
(மூ விளத்துடன் ஈற்றில் நேரசை)

ஊழ்வினையும் ஆள்வினையும்

[628-வது பக்கத் தொடர்ச்சி]

இத்தகைய நல்வினை யாற்றற்கு ஊக்கமும் முயற்சியும் ஓயா திருத்தல்வேண்டும்.'முயற்சி திருவினை யாக்கும்' அருமையுடைத்தென் றசாவாமைவேண்டும். "பெருமையுடைய செயல்' 'செயற்கரிய செய்வாரே பெரியார்'. 'பொறியின்மை யார்க்கும் பழியன்று, அறிவறிந்த ஆள்வினை யின்மையே பழியாகும்'. ஆதலால், மரணத் தறுவாயில் இருக்கின்ற ஒருவர் இறந்திடுவார் என்று நமக்குத் தோன்றினாலும், காலகதி கணித்து நாம்பாலிருக்கவில்லையாதலான் அவர் அந்நோயினின்று மீளுதற்காகிய உபாயங்கள் செய்தலே நம்முடைய கடமையாகும்.

> உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
> இறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கும்
> ஆயுண் மருந்தொழுக்கல் தீதன்று லல்லனபோல்
> ஆவனவு முண்டு சில.

என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

முயற்சியால் ஆகாத தொன்றில்லை. நல்லன வென்றறிந்த எவற்றினும் முயலலே முக்கியம். ஓரறிவுயிர் முதற்கொண்டு இறுதியாம் ஆறறிவுயிர் ஈறாகப் படிப்படியாய்ப் பல்லாயிரம் பிறவிகளெடுத்து வினைநுகர்ந்து உயர்ந்த இம்மனிதப் பிறவி வாய்த்தது முயற்சியாலேயே. 'புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகிப் பல்மிருகமாகிப்' பெரும் புண்ணியத்தால் இம்மனிதப்பிறவியெய்தினோம். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ. இவ்வரிய பிறவியிலே உண்பது முடிப்பது முறங்குவது மாகக் கொன்னே காலத்தைக் கழித்தால் எப்பிறவியில் இறைநிலை எய்தப் போகின்றோம். ஆன்மா என்று முளது; இறைவனு மென்று முள்ளான். என்று முள்ள ஆன்மா என்றுமுள்ள அவ்இறைவனை யடைதற்குஇன்றி, அளவிலா அனந்தகோடி வருடங்களாகப் பிறவிகளிலேயே சுழன்றுகொண்டிருக்கச் செய்தவினையால் இறைவனை அறியவும் அடையவும் அறிவும் ஆற்றலும் உள்ள மக்கட்பிறவி பெற்றபின்னரும் ஏமாந்துவிடுவோமானால் எக்காலத்தில் ஈடுமெடுப்பு மில்லா இறைவன் திருவடி நாடுவதறியலும். இந்தத்தத்துவம் முற்றுமறிந்த நம் மணவாள மாமுனிப் பெருந்தகையாளர் ஆர்த்திப் பிரபந்தத்தில்

> என்றுள னீசனுயிருமன் றேயுண்டிக் காலமெல்லாம்
> இன்றள வாகப் பழுதே கழிந்த திருவினையால்
> என்றள வின்றியி ருக்குமென் னெஞ்ச மிரவுபகல்
> நின்று தபிக்கு மெதிராசா நீயருள் செய்தபின்னே.

என்று கடந்தகாலத்துக்கு மனங்கரைந் தழுவார். கேவலம் இவ்வுலகில்இன்பம் அனுபவிக்கவிழையினும் முயற்சி யில்லாது யாதுங் கைகூடுவதில்லை. விதை நிலம், ஏர், மாடு முதலான ஏது இருந்தாலும் உழுது விதைத்தாலன்றி விளைவதில்லை. அது விளைவதற்கும் களையெடுத்தல் நீர்பாய்ச்சல் காத்தல் முதலான முயற்சி யில்லாதுபோனால் அழிந்து விடுமல்லவா? ஆதலால், இம்மைப் பயனுக்காயினும் சரி, மறுமைப் பயனுக்காயினும் சரி, முயற்சி அத்தியாவசியம் வேண்டற்பாலது. இதனைத் தருமன் பீஷ்மனை வினவித் தெரிந்துகொள்ளும் பகுதியிலே படித்துத் தெரிந்து கொள்ளுவோம்.

> நிலமீதில் யாது சொலவேண்டு நீத
> நிருபா புகன்றி டெனவே
> தலைமீது வான நதிசேய் பதங்கள்
> தமையே வணங்கி யறிஞர்
> திலகாசெ லாதி மனுவெடுத்த னங்கொல்
> தெய்வெத்த னங்கொ லிதனுட்
> பலமேகொ டுப்ப தெதுகேற வென்று
> பகர்வாயெ னப்பின் மொழிவான்.
>
> முன்னால் வசிட்ட முனிநான் முகத்து
> முதலோனை நின்னின் வினவ
> அன்னா னுரைத்த பரிசொன்று கேட்டி
> யவனுக்குண மேவு மனிதர்
> பன்னாண் முயற்சி யதனான் மிகுத்த
> பலனே யெடுப்பர் விதியின்
> தன்னா லெடுப்ப தரிதா முயற்சி
> தனையே விடுத்த நரரே.
>
> தரைகீறி ஏரில் விதைவித் திடாது
> தாராது மிக்க பலனே
> புரவா லயங்கள் பழுதாகி னன்கு
> புதித்தாக் கிடாது நிலையா
> நிரைமா தவங்கள் முயலாது ஞான
> நெறிமுத்தி யாவர் பெறுவார்
> அரிதாக நாடு புருடெத்த னங்கள்
> அலதில்லை வேறு பெரிதே.
>
> கோளராவுயர்த்த கோமான்கொண்டுதன் வசப்படுத்து
> நீள்கடலுலக மெல்லா நீவிர்கைக் கொண்டுவாழ்ந்தீர்
> ஆள்வினைமுயற்சி யென்றங் கிடெய்வெத் தனந்தான்
> மூளனல்தனையெழுப்பு முதிவளி நிகர்க்கு மாதோ
> நெய்யிலா விளக்குப்போல நிகழ்மனு டெத்தனங்கள்
> செய்திடாவவன்றனக்குத் தெய்வவெத்தனந்தாராவாம்
> பெய்வளையலியைச் சேர்ந்தபெற்றியா முயற்சிவிட்டே
> தெய்வவெத்தனத்தை நம்பிச் சோர்ந்திடு மியற்கைதானே.
> புருடவெத் தனம்விட்டார்க்குப் புண்ணிய வுலகமில்லை
> புருடவெத் தனங்கொண்டார்க்குப் புண்ணிய வுலக [முண்டு
> புருடவெத் தனந்தனக்குப் பொருந்தனுகூலந்தெய்வம்
> புருடவெத்தனமல்லாதோர்பொருளிலைவேறுமன்னே.

ஆநுசாசனிகபர்வம்—இளிச்சருக்கம்.

இப்பகுதியை விளக்க வேண்டியதில்லை. முடிவாய் முயற்சியை உலைவின்றிச் செய்தல் வேண்டுமென்பது தான். முயற்சியை எதனில் நாம் பயன்படுத்தவேண்டுமென்பதையும் அறிந்திருக்கவேண்டும் பௌதிக முயற்சியால் இப்போது இவ்வுலகு எத்தனை வகையான விநோதத்தை யடைந்திருக்கின்றது எவ்வளவுக் கெவ்வளவு இவை நல்லன வென்றும் சௌகர்யம் என்றும் நினைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அந்நினைவு ஆன்மநிலையை ஈர்த்துக்கொண்டிருக்கிறது. முற்கால முனிவர்கள் தவத்தாலும் தயாபரன் தண்ணளியாலும் ஆயுள் வளரப்பெற்று உலகினர்க்கு உய்யுமாறு உதவி புரிந்து உலவினார்கள். இப்போது ஆயுள்வளர்க்கும்உபாயம் குரங்கின் உடற்கூற்றைப் பொருத்திச்செய்வதாகக் கேள்விப்படுகின்றோம். இந்நெறிக ளெல்லாம் என்னதீமைக்கோ.இத்தகைய முயற்சியையன்று

இங்குயாம் வேண்டுவது. அறிவுசெம்மைப்பட்டு ஆண்டவனடிமலர் அணுகும் முயற்சியேயன்றோ வேண்டும். குரங்கைக் கொல்வதின்றி, ஆண்டவனிடத்து அன்புகொண்டு முயன்ற தன்மையால் ஆயுள் பெற்ற வரலாறு ஒன்று காண்போம்.

மாண்டுக்ய முனிவன் அரிதில் வரங்கிடந்து பெற்ற ஒருமகனாந் திருமகன் மார்க்கண்டேயன் 'தணிச்சிக் கூர்ம்படை கடுந்திற லொருவன் தன்னைப் பிணிக்குங்காலம், வந்து நெருங்கிவிட்டதே என்று இரங்கும் இருமுதுகுரவரால் தன்ஆயுட் குறைவையறிந்த அவன் தன் அன்னை தந்தையை அன்புடன் பார்த்து "நீவிர் அஞ்சற்க. அயில்வேற்கையனும் அண்ணலின் அருளால் ஆயுள்பெற்று அடைகுவன் ஈண்டு' என்று அவர்கட்குத் துணிவு கூறி, மணிகர்ணிகை கோயிலுட் புகுந்து புளகமெழ வலம் வந்து பொங்குமெழில் புராந்தகன்முன் 'ஐயனே! அமலனே! அனைத்துமாகிய மெய்யனே! பரமனே, விமலனே! அழற் கையனே! கையனேன் காலன் கையுறுது உய்ய நேர் வந்து நீஉதவு' என்று துதித்து ஏகாக்ர சித்தனாய்த் தவங்கிடத்தலும், தீனபந்துவாம் நீலகண்டன் அச்சிறுவன்முன் தோன்றி 'அஞ்சலை அஞ்சலை அதற்கு' என்று கூறினான், பெருமானைக் கண்ட சிறுவன் 'செஞ்சா ணிரண்டையும் சென்னி சேர்த்து 'உய்ஞ்சனன் இனி' என்றுபல்வகைத் துதிகளோதுதலும், ஆசி தந்து அமலன் மறைந்தான். மார்க்கண்டனும் அச்சிறுவனுக்கு ஆயுள் ஈரெட்டு மாண்டவாறே யமதூதர்கள் வந்து, இறைவனை யர்ச்சிக்குமியல்புடையனா யிருத்தலைக்கண்டு, பயந்துசென்று இயமனிடங் கூற, அவன் பெருஞ் சீற்றங்கொண்டு சித்ரகுப்தனால் ஆயுளுள் சென்றன வென்றறிந்து, தானே வேலைக் கைக்கொண்டு பகடுமீதிவர்ந்து வந்து பரமனைப் பரவும் பக்தனும் சிறுவன்மேல் எறிந்தான் பாசம், ஈர்த்திடலுற்றான். அறிந்தான் அன்பனும்; ஈசனை ஏத்தினன், அவனடிநிழல் பிரிந்தானல்லன். இமையோரெல்லாம் இந்தப் பெருமைந்தன் மறித்தான் என்று மருளலுற்றனர். கந்தரமுற்றும் ஈர்க்கும் பாசத்தால் இடரில்லாத மார்க்கண்டன்முன் கார்க்கண்டத்துக் கண்ணுத லையன் தோன்றி, 'நின்பால் வரு துன்பம் தீர்க்கின்றாம் நீயஞ்சலை' என்று கழறினான். பின்னர்ப் பதிமூன்றும் சிதைத்தான் இயமனைச் சினந்துநோக்கி இவன் மதத்தான் மிக்கான், மைந்தன் உயிர்வாங்கப் பதைத்தான், என்னா உன்னி வாமச் சேவடி தன்னால் சிறிதுந்தி உதைத்தான். கூற்றுவன் மண்மிசை விண்முகில்போல் வீழ்ந்தான். பின்னர் மைந்தனை நோக்கி,

> மைந்த நீநமை வழுத்தி மாசிலா
> முந்து பூசனை முயன்ற தன்மையால்
> அந்த மில்லதோ ராயு ணிற்குயாம்
> தந்து நல்கினம்

என்று சிவபெருமான் சாற்ற,எண்ணிரண்டு அளவைக் கடந்து என்றுமுள ஆயுள்பெற்று எய்திய சான்றோன் சரிதை இறைவன் நினைவொடு இயற்றும் முயற்சி என்றும் மாறா இன்பம் பயக்கு மென்று தெரிவிக்கின்றதல்லவா? இதனால் தனக்கு ப்ராரப்தமாகப் பலித்து அனுபவித்தே தீரவேண்டிய வினையையுங் கடத்த லியலுமென்று அறியவேண்டி யிருக்கின்றது. இதைக் கருத்துட்கொண்ட குமரகுருபரர்,

> உலையா முயற்சி களைகணா வூழின்
> வலிசிந்தும் வன்மையு முண்டே—யுலகறிய
> பான்முலை தின்று மறலி யுயிர்குடித்த
> கான்முளையே போலுங் கரி.

என்று கூறினர்.

வைணவத்திலும் இத்தத்துவத்தை அழகாக விளக்குகின்றார்கள். என்னை அடைந்தோரை எவ்வினையும் சாராதிருக்க வேண்டுமென்று எதிராசன் அரங்கனிடத்து வரம் பெற்றிருக்கின்றான். இதனை மணவாள மாமுனிகள்,

> முன்னைவினை பின்னை வினைபாராத்த மென்னு
> மூன்றுவகை யானவினைத் தொகையனைத்தும் [யானே
> என்னையடைந் தோர்தமக்குக் கழிப்பதெனுமாங்கர்
> எதிராசா நீயிட்ட வழக்கன்றோ சொல்லாய்"

என்று ஆர்த்திப்பிரபந்தத்துள் அருளுகின்றார். மேலும் வேதாந்த தேசிகரும்,

> முன்செய்தவினைத்திரளின் முளைத்ததன்றி மற்றுள்ள
> முதலறிந்து முனைத்த கூற்றில்
> தன்செய்ய திருவருளால் இசைவுபார்த்துத் தழல்
> சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
> பின்செய்யும் வினையினினை வொன்றுதொன்றும்
> பிழைபொறுத்து வேறுளது விரகான்மாற்றும்
> என்செய்ய தாமரைக்கட் பெருமானெண்ண
> மெண்ணுதா ரெட்டிரண்டு மெண்ணுதாரே.

என்றும்

> மாளாத வினையனைத்து மாளநாம்போய்
> வானேறி மலர்மகளா ரன்புபூணும்
> தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
> தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடிக்
> கேளாத பழமறையின் கீதங் கேட்டும்
> கிடையாத பேரின்பம் பெருக நாளும்
> மீளாத போடிமைக் கன்புபெற்றோம்
> மேதினியி லிருக்கின்றோம் விதியி னாலே

என்றும் இறைவன்பால் கொண்ட ஆர்த்தியின் மிகுதியால் "முளைத்த கூற்றில் தன் செய்ய திருவருளால் இசைவுபார்த்துத் தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்க்கின்றான்" இவ்வாறுமாளாத வினையனைத்தும் மாளப் பெற்றோர் விரசைக் கப்பாலாம் வைகுந்தம் சென்று மலர்மகளார் அன்பு பூணும் தோளாத மாமணிக்குத் தொண்டு செய்யவேணும். அப் பெருமானைத் தொழவேண்டும்; உகந்து தோத்திரங்கள் பாடியாடவேண்டும். அப்பெருமானை வழுத்தும் கேளாத பழமறையின் கீதங் கேட்கவேண்டும்; என்றும் கிடையாத பேரின்பம் பெருகவேண்டும்; எந்நாளும் மீளாத போடிமைக்கு அன்பு பெறவேண்டும். அஃதில்லாது உடலோடு இக்கர்ம உலகில் இருப்பதற்குக் காரணம் என்னை? என்று வியக்கின்றார். அதற்குங் காரண முளதெனத் தெளிந்து 'உலகினரைத் திருத்துவான் விதியினா லிருக்கின்றோம்'—அதாவது, இறைவன் தனக்கிட்டகட்டளையாலேதா னிவ்வுலகிலிருப்பதென்று அருள்கின்றார்.

சிதம்பரதேவர் சரிதம்.

1. உப்பரிகை

நீர்வள நிலவளம் பொருந்திய இந்தப் பரதகண்டத்தில், மாதமும்மாரிபெய்து உயிரனைத்தும் தத்தம் கருமத்தின் முறைப்படி எய்திய இன்பதுன்பங்களை யனுபவித்துவரும் நாளில், பாலைவனம் அல்லது பாலக்காடு என்னும் திருநாட்டில், நல்லொழுக்கம் நன்னெறி நல்லோரிணக்க வழிபாடாய், ஆறிலொன்று கடமை ஈந்து, களிப்புற்று நாட்கழித்துவந்த பிரஜைகளுக்குத் தம் முன்னைய புண்ணியங்களெல்லாம் ஓர் உருவாய் அமைந்தாற்போல், வணங்கா முடிபெற்ற வீரசூர பராக்ரமசாலியாய்க் குலசேகரப் பெருமானென்னும் திருநாமமுடைய ஓர் நரேந்திரன், சக்கரவர்த்தியாயமைந்து, மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து நீதிவழுவாது செங்கோல் நடாத்திவந்தான்.

அவ்வரசனுக்கு இந்திரசேனை சுமதிமாது என்னும் இரண்டு தேவியர்களிருந்தனர். இவர்களுக்கு அழகிற் சிறந்தும் கற்பிலுயர்ந்தும், அன்னை தந்தை ஆசிரியர்கள்பால் பக்தியோடும், தென்காசி என்னுங் கற்பாத்தி நதிதீரத்தில் கோவில்கொண்டருளும் விச்வநாதீச்வரரை அனுதினமும் வழிபட்டு வணங்கிவருபவர்களாகியும், சகலகலைப் பயிற்சியுடையவர்களாகியுமிரண்டு புத்திரிகளிருந்தனர். அரசன் தன் புத்திரிகளுடைய நற்குணங்களை யறிந்து அவர்கள்மேல் வைத்த ஆசையால் புத்திரரில்லாததைக் குறையாகச் சிறிதேனுங் கொள்ளாமலிருக்க, ஒருநாள், வசந்தகாலத்தில் தம்மனை மேன்மாடத்தில் வழக்கப்படி ஆண்வேடந் தரித்து உல்லாஸமா யுலாவிக்கொண்டிருந்த, தன் புத்திரிகளைப் பார்த்துத் திகைத்துக் கோபங்கொண்டு "இந்த வசந்தகாலத்தில் ஏன்னரண்மனைக் காவலைக் கடந்து உப்பரிகையின்கண் உத்தரவின்றிச் சென்று உலாவத்துணிந்த இச்சிறுவர்கள் யாவர்? அங்கு அழகிய மேனியுடைய வீரர்கள் வரவேண்டிய காரணமென்ன?" என்று யோசித்து ஒன்றும் புரியாமற் றிடுக்கிட்டுத் தன் சேவர்களி லொருவனை யழைத்து "அங்கு நமது உப்பரிகையில் சிறிதேனும் பயமின்றித் திரிகின்ற ஆடவர்களிருவரையும் இக்கணமிங்குக் கொண்டுவருக" என்றுத்தரவளித்தான்.

சேவகன் திடுக்கிட்டுப் பயந்து மறுமொழி சொல்லவகைதெரியாது அரசன் குறிப்பிட்ட மாளிகையினருகிற்சென்று சற்று யோசித்து அக்கட்டடத்தின் படிவாயிலில் நின்று யாரேனும் தனக்கெதிர்ப்படுவார்களோ வென்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். தாதிகளிலொருத்தி அச்சேவகன் நோக்கத்தை யறிந்தவள்போல் வெளியில் வந்து, " நீ யாது காரணத்தாலோ அங்குப் படிவாயிலிலேயே வந்து நின்றுவிட்டாய் ?" என்று பரிகாசமாகக் கேட்கச் சேவகன், "அம்மணீ, அரசன் உத்தரவின்படி யான் உப்பரிகைக்குப் போகவேண்டி யிருக்கின்றது ; சற்று வழிகாட்டும்." என்று வினயமாய்க்கேட்க, " உப்பரிகைக்கு இப்போது போகலாகாது." என்று கூறி, " அப்படி நீ வருவதற்கு அரசன் உத்தரவு இருப்பினும் உனக்கு வழிகாட்ட எனக்கு உத்தரவில்லை " என்று உப்பரிகை வழியை மறித்து நிற்க, சேவகன் கோபங்கொண்டு, "அரசனுத்திரவுக் கெதிருத்தரவு கூறுகின்றாயா ; வழி விடுகிறாயா, இல்லையா ?" என்று உரப்பிக்கொண்டு, தன் சேவகக் கடிபை உறையினின்றும் உருவினன். இதைக்கண்ட தாதி சற்றுங்கூசாமலவனுக்குப் பின்புறமாகப் பூனைபோற் குதித்து அச்சேவகன் கடி கீழேவிழவும், அவன் திடுக்கிட்டு அடிசாயவும், தனதுகையில் வைத்திருந்த ஓர்கயிற்றினால் அவனிரண்டு கால்களுக்கும் ஓர் சுருக்கிட்டு இழுத்தாள். இவையெல்லா மொருகணப்பொழுதில் நடந்துவிட்டபடியால் சேவகனுக்கு யாதொன்றும் புலப்படாமற் போகவே, ஓவென்று அலறிப் பூமியிற் சாய்ந்தான். அவன் எழுந்திருக்கச் சக்தியற்றவனாய்த் தன்னுடைய கைவாளையுருவிக் கட்டையறுக்கமுயன்றான். அவ்வரவத்தை உப்பரிகையிலுலாவிக்கொண்டிருந்த இராஜகுமாரிகள்கேட்டு அதன் காரணத்தைத் தெரிந்துகொள்ளத் தாதிகளிலொருத்தியை யனுப்பினர். அவள் அங்குப் போகுமுன் அவ்வரண்மனை வேலைக்காரர்களும் அவ்வரவம் யாதென அறியும்பொருட்டு அவ்விடத்திற்குச் சென்றனர். இதற்குட் சேவகன் கட்டையறுத்து வாளாயுதத்தைத் தாதிக்கெதிரிலோங்கினன். அப்போது வேலைக்காரர்கள் நெருங்கி அவன் கரத்தையசைய வொட்டாமற் பிடித்து, "நிராயுதையாய் நிற்குமிப்பேதையோடு போர்புரியும் வீரசிகாமணி யாவனோ?" என்று புன்சிரிப்புடன் வினவச் சேவகன் நாணி ஒன்றுஞ்சொல்லாமல் நின்றான்.

இராஜகுமாரிகளனுப்பிய தாதி படிவாயிற் காவற்றுதியைப்பார்த்து, "அடி மாணிக்கம்! என்ன அக்கிரமம்? நீயேன் அந்த ஆண்சிங்கத்திற்குக் கோபமூட்டிவிட்டாய்? நடந்ததைத் தெரிந்துவர நமதரசிகள் கட்டளை யிட்டனர்' என, மாணிக்கம் நிகழ்ந்தவற்றை ஒளியாமற்சொல்ல, அவைகளைத் தாதி இராஜபுத்திரிகளுக்குத் தெரிவித்தாள். உடனே இராஜகுமாரிகள் அச்சேவகனை யழைத்துவர உத்தரவளித்துத் தம் ஆண்வேடத்தை மாற்றிச் சேவகன் வரவை எதிர்பார்த்திருந்தனர். சேவகன் வந்து பணிந்து இராஜ உத்திரவை வெளியிட்டு " இவ்விடம் உலாவிக்கொண்டிருந்த ஆண்மக்கள் யாவரோ" என்று இரங்கிக்கேட்க, தந்தையின் குறிப்பறிந்து இராஜபுத்திரிகள் மகிழ்ந்து "யாங்கள் இருவருமே ஆண்வேடம் பூண்டு விளையாடிக்கொண்டிருந்தோம்; அகலநின்று பார்த்த எங்கள் தந்தையார் என்ன சந்தேகங்கொண்டாரோ தெரிகிலேம்; நீ சென்று அவ்வாண்மக்கள் இதோ வருகின்றார்களென்று வேந்தனுக்குத்தெரிவிப்பாயாக," என்றுரைத்துச் சிவிகையை வரவழைத்து, முன் தாம்பூண்டிருந்த ஆண்வேடத்தை மீண்டுந் தரித்தவராய்ச்சென்று கோபங்கொண்டு நிற்கும் தந்தையை வணங்கினர். ஆயினும் இக்கோலத்தின் உண்மையை மிக விரைவில் உணர்ந்த அரசன் அளவிலா அகமகிழ்ச்சியோடுந் தன் மக்களை வாரியெடுத்து முத்தமிட்டு மகிழ்ந்து, "என் கண்மணிகாள் ! நீவிர் யாது காரணம்பற்றி ஆண்வேடங் கொண்டீர்?" என வினவ, குமாரத்திகளிருவரும், " விளையாட்டாகத் தரித்தோமே தவிர வேறொரு காரணமுமில்லை" என்று நயந்துரைத்தனர். மன்னவன் மக்களுக்கு விடை கொடுத்தனுப்பித் தன் தேவிமார் வைகும் அந்தப்புரம்போய் நடந்ததைச் சொல்லித் தன்னரசாட்சியைத் தனக்குப்பின் ஏற்கவல்ல "ஓர் ஆண்மகவின்றி வாழ்கின்றோமே; இவ்வாழ்வும் ஓர் வாழ்வாமோ" என்று மிகுந்த சஞ்சலத்துடன் வருந்தினன்.

---

2. இராஜசபை

விக்ரமசேனன்—முதன் மந்திரி.

விக்ரமசேனன்:—வாரும், சேனாதிபதியே! வாருங்கள் சபையோர்களே! நமதரசர் ஏகசக்ராதிபராய் மனக்கலக்க மொன்றுமின்றி நீதிவழுவாது இராஜ்ய பரிபாலனம் செய்துவருபவ ராயிற்றே! முறையிடும் குடிகளின் குறைகளை நாடோறுந் தானே தக்கபரிவுடன் கேட்டு அவர்களிஷ்டப்படியும், தருமத்துக்கும் நீதிக்கும் சற்றேனும் பழுதுவாராமலும் தீர்ப்புச்செய்து மூர்க்கனுக்குச் சாந்தத்தையும், துஷ்டனுக்கு நீதியையும் மூடனுக்கு ஞானத்தையும், துன்மார்க்கனுக்குச் சன்மார்க்கத்தையும் போதித்துப் பிரஜைகள் சிறிதேனும் தனது தீர்ப்பால் வருந்தாமல் வழக்குத்தீர்த்துவிடும் புண்ணிய புருஷோத்தம ராயிற்றே! இப்போது ஏறக்குறைய ஒருவாரமாய் இச்சபைக்கு வராமலும், நம்மில் யார் சென்றாலுந் தரிசினம்தாராமலும் தமது அன்புடைய புத்திரிகளாற் கூட ஆற்ற முடியாத துயரத்தையுற்று மனம்வருந்திப் பள்ளியறைவிட்டெழுந்திராமலு மிருக்கும் காரணம் என்ன ? இந்த மகா இராஜதானியின் எல்லாக் காரியங்களையும் மறு உத்திரவுவரையில் நீயேபார்த்து நீதிவழுவாது அரசாட்சி செய்து வருவாயாக" என்று திருமுகமெழுதி இவ்வேழையாகிய அடியேனுக்கு உத்தர வனுப்பினரே, இதன்காரணம் யாது? குலசேகரப் பெருமான்நடத்திவந்தசக்கரவர்த்தித்தொழிலைப்புரிவதென்பதுஅவரது ஒரு அணுவுக்குக்கூட நிகரில்லாத என்னாலாகுமா? இந்தஒருவாரமாய் நடந்துவருமிராஜகாரியங்கள்அவர் கிருபையினாலேயேயன்றி என்னாலல்லவே. இச்சபையில் என்னைவிடப் பெரியோர்களும் மகான்களும் எவ்வளவோபே ரிருக்கின்றார்களே. மகாதேவர், அறிவிற்கும் ஆற்றலுக்கும் பகைவரை வெல்லவேண்டுமுபாயத்திற்கும் பிரஜைகளிடத்து அவருக்கிருக்கும் நட்புக்கும் அவரே உவமையே யொழிய வேறில்லையே. இதோ சேனாதிபதி பராக்ரமசேகர ரிருக்கிறார். இவர் அரசனுக்குச் சிற்றப்பர் பிள்ளையும், அதிபராக்ரமசாலியும்,யுத்தத்தி லெப்போதுஞ் சுபஜயமேயன்றி அபஜயம் நேரிடாமல் காப்பவரும், அதிக தைரியசாலியும், பகைவரைத் தாக்கி ஜயித்து நமதரசனைச்சக்ரவர்த்தியர்க்கிய புண்ணியரு மல்லரோ ? இன்னும் கல்வியோடு இராஜகாரியங்களிலும் அறிவுடையோர் இங்கிருப்பார் அநேகர். யானோவென்றால், இவ்விராஜ வம்சத்தவனுமல்லன்;நமதரசனுக்கு எவ்வுதவியுஞ் செய்தவனுமல்லன்; புத்திநுட்பமுமில்லை;என்னாலிப்பெருஞ் செங்கோலை நடத்தவும் முடியுமா? யான் செய்துவந்த இராஜாங்க மெப்படி இருக்கின்றதென்றால் சிம்மாசனத்தில் எலி யுட்கார்ந்திருந்ததுபோலவும், வித்வசபைநடுவில் மூடன் அக்கிராசனம் வகித்ததுபோலவுமிருக்கிறது. ஆகையால் நாமெல்லோரு மொன்றாகச் சேர்ந்து நமது இராஜாவினது பள்ளியறைசென்று அவர் இராஜ்யபாரத்தை வகித்து முன்போல் அரசாட்சி செய்யவேண்டுமென்று முறையிட்டுக்கொள்வோம். உங்கள் எண்ணமென்ன" என்று வெகு வினயத்தோடு வினவினன்.

இரண்டாவது மந்திரியும் பொக்கிஷாதிகாரியுமான மகாதேவ ரெழுந்து "ஐயனே! அரசனின்றிச் சபையிலிருப்பது ஓர் அழகாயிராமற்போனாலும் இராஜப்பிரதிநிதியாகிய தேவரீரைவிட இங்கு இராஜாங்கத்திற்கு யோக்கியமானவர் யாவர்? சற்குண சாதுக்களானவர்கள் தங்களுடைய குணத்தையும் பெருமையையும் புகழ்ந்து சொல்வரோ? பிரஜைகளுக்கும் மற்றெல்லாப் பரிவாரங்களுக்கும் இராஜனிடத்திருக்கும் பக்திவிச்வாஸம் தங்களிடத்திலுமிருப்பதற்கு யாதும் ஐயமில்லை. அரசர் மனோசஞ்சல மடைந்திருக்கிறாரே யென்னுமோர் வியாகுலமேயன்றி அவர் இங்கு இல்லாமையால் இராஜகாரியாதிகளிற் பழுதுவருமென்னும் சங்கை இவ்விடமிருப்பவர்களி லொருவருக்குமிவ்வொரு வாரமா யில்லையென்பதை அயிர்ப்பாருமுளரோ? இப்படியே ஒரு யுகமட்டும் இராஜாங்கந் தங்களாதீனத்திருப்பினும் நாளுக்குநாள் வளமுடன் பெருகிவருமேயன்றி அதன் கீர்த்தி ஒருநாளும் குன்றாது. எனினும், நமதரசனது மனக்கலக்கந் தீரும்படி செய்யவேண்டிய முயற்சிகளெவையோ அவைகளைச் செய்வோம். முதலில் அவர் யாது காரணத்தால்வியாகுலம் கொண்டாரென்று தெரிந்துகொள்ளவேண்டும்," என்றுரைத்துத் தமக்கெதிரி லிருக்கும் பராக்கிரமசேகரனைப் பார்த்தார்.

பராக்ரமசேனன், விக்கிரமசேனன் தன்னைச் சுட்டிக்காட்டிச் சொல்லவே, தான் மன்னவனது சகோதரமுறையோடு சேனாதிபதியாயிருந்துந் தன்னையரசன் மறந்து தனததிகாரத்தை ஒரு மந்திரிவச மொப்புவித்துத் தன்னையும் மந்திரிக்குக் கீழ்ப்படிந்துநடக்கும்படி செய்தனனே! இம்மந்திரி தனக்கு வாய்த்த இந்த அற்பநாட் செல்வத்தைப் பெரிதென்றெண்ணி இராஜசகோதரனாகிய தன்னைச் சிறிதேனும் மதித்திடாமல் இப்படிச் சபையோர்கள் தன்னை யிகழச்செய்தனனே, என்று தனக்குள் யோசித்துப் பொறுமையுங் கடுஞ்சினமுங் கொண்டு தானெண்ணியிருப்பதுபோல்தானாகிலும்தன் மைந்தர்களில் ஒருவனாகிலும் அரசபதவியை அடையும்போது இம்மந்திரியைச் சிறையிலடைத்து அவன் கருவத்தை அடக்காமற் றீர்வதில்லை என்று பிரதிக்கினைசெய்துகொண்டு வெளியில்தன்னைப்போல் இராஜபக்தியுடைய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்களா வென்று பிறர்நினைக்கும்படி முகத்தை மலரச்செய்து எழுந்து, முதன் மந்திரியைப்பார்த்து, "ஓ விக்ரமசேனரே! நீர் ஒன்றுக்கும் இன்று சஞ்சலப்படவேண்டா. உம்மைவிட இச்சபையில் இராஜப்பிரதிநிதியா யிருக்கத்தகுந்தவர் யாரிருக்கின்றார். அரசர் தன் பகைவரைவென்று ஏகசக்ராதிபரா யிருக்கின்றார்; உமது ஏவற்படியேதான் நான் யுத்தமுகம் போவதும் உமது யுக்திப்படியே ஜயம்பெறுவதும் தவிர என்னாலிங் காவதென்ன? எல்லாமுணர்ந்த சுத்தவீரராகிய நமதரசர் உம்மைத் தனது பிரதிநிதியாகச்செய்தது அவருக்குப் பெருமையுஞ் சிறப்புமேயன்றிவேறென்ன? இராஜவம்சத்தாருக்கு உம்மிடத்திலிருக்கும் நம்பிக்கைக்கு ஓர் அளவே இல்லை என்பதற்கு இதுவே அறிகுறி. நீர் ஓர் யுகமேனு மிப்படியே இராஜவுத்திரவின்படி இவ்வளநாட்டுக் காவலைக் கைக்கொள்வது

எனக்கும் என் புத்திரர்களுக்கும் மற்றை யினத்தார்களுக்கும் பெருமையுஞ் சந்தோஷமுமே தவிரப் பொறாமையுண்டாமா? இச்சமயம் நமதரசர், வியாகுலமடைந்திருப்பதாகக் கூறினீரே. அதைப்பற்றிச் சற்று யோசிப்போம். அவர் தனக்குச்செல்வங்குறைந்ததென்றும் பகைவராற் றுன்பமுண்டாயிற்றென்றும் வருந்துவார் அல்லர். தன் பட்டத்தைத் தனக்குப்பின் ஏற்றுக்கொள்ளப் புத்திரனில்லாமற் போய்விட்டதே யென்னுஞ் சோகமேயாம் இது. இதற்குக் காரணமென்னவெனில், இராஜபுத்திரிகள் ஆண்வேடந்தரித்து விளையாடிக்கொண்டிருந்ததை அரசன் பார்த்துத் தனக்கு ஆண்மகவில்லாச்சோகத்திலழுந்தினுர்போலும். இதை நீக்கும்படி நாமெல்லோரும் மிக விரைவில் முயல வேண்டும். அவர் ஏன் இதைக்குறித்து வியாகுலப்படவேண்டும்? அவருக்கு ஊர்வசி திலோத்தமை என்பவர்களை யொத்த இரண்டு புத்திரிகளிருக்கின்றனர். அவர்தம் அழகெப்படியோ அப்படியே குணத்தையு முடையவர். அவர்களிலொருத்திக்குப் பட்டத்தைக் கொடுக்கலாகாதா ? அல்லது அவர்களை வீரமுடைய குமரர்களுக்கு மணஞ்செய்துகொடுத்து அவ்வீரர்களுக்கு இவ்வரசை அளிக்கலாகாதா? அப்படி இல்லாவிடின் என் புத்திரர்களிலொருவனை சுவீகாரஞ் செய்துகொண்டு தனக்குப்பின் பட்டமாளும்படி அமைக்கலாகாதா? இப்படியனேக மார்க்கங்களிருக்க அவர் புத்திரனில்லையென்று வருந்துவானேன். யாம் அனைவருஞ்சென்று இன்னவைகளைக்கூறி அவர் வியாகூலத்தைத் தீர்ப்போம்'' என்றான்.

விக்ரமசேனன் அப்போது, "ஆகா, பராக்ரம சேகரரே! நன்மையுரைத்தீர். நமதரசன் புத்திரரில்லையென வருந்துவானேன்? நீர் சொன்னபடி செய்துகொள்ள அவருக்கெல்லாப் பாக்கியமு மிருக்கின்றதே! அப்படியொன்றுஞ் செய்ய முடியாமற்போயினும் பராபரக் கடவுளைக்குறித்துத் தவம்பண்ணிப் புத்திரபாக்கியம் பெறலாமே'' என்றுசொல்லி மனந்தேறிச் சந்தோஷத்துடன் யாவரையும் பார்த்து, "நமதரசனது சோகத்தை நிவர்த்திசெய்ய முயலுவோம்'' என்றெழுந்தான். சபையோர் யாவரும் அவனுடன் எழுந்து அவன் முன்செல்லப் பின்சென்றனர். விக்ரமசேனன் சொன்னதுபோல் அரசனுக்குப் புத்திரப்பேறு உண்டாகவேண்டிய முயற்சிகள் செய்தால் அவைகளை எப்படியும் கெடுத்துவிட வேண்டுமென்று பராக்கிரமசேனன் தனக்குள்ளே நிச்சயஞ் செய்துக்கொண்டு அவருடன் சென்றான்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 5. தைலமாட்டு படலம்.

[606-வது பக்கத் தொடர்ச்சி.]

அரக்கிமூக் கரிவ தன்றி இளவலைப் பிரிய நேரார்.

கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை இழைப்ப,

வான்மீகர்தம் நூலிற்போல் தகவுந் துறக்காமல், கோல்மாத்திரந் துறந்து கானுங் கடலுங் கடந்து இமையோர் இடுக்கண் காக்கத் தயரதன் மதலை புறப்பட்டுவிட்டான். பிருகுப்பிரஜாபதி தனக்குப் பண்டைநாள் இட்ட சாபத்தை நிறைவேற்றிக்கொள்ளுமாற்றால் அரக்கர்களை அழிப்பதற்குச் சானகியும் தொடர்ந்துடன் செல்ல வேண்டியது இராகவன் கைக்கொண்ட கருமத்திற் கின்றியமையாததாயிற்று. மற்று, முதனூலினின்று வேண்டுமெனின் பலபடி விலகிச்செல்லும் உரிமையைக் கையாண்ட கம்பர் இலக்குவனை எற்றுக்கு உடன்செலுத்தினர் என்னுமோர் ஐயம் இங்கு எழுதல் இயற்கையே. கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன் இராகவனுதலின் இவ்விளையோன் போர்த்துணையாய்ப் போந்தானல்லன். இலக்குவனது இன்றியமையாமை இக்கதையில் தோன்றவில்லைபோல் கருதுவதன்முன், இராமனது காரியத்திற்குச் சூர்ப்பணகையின் மூக்கு மிகவும் முக்கியமாய உண்மையை மறவாக்கால் அவ்வையம் அகன்றுவிடும்.

> காந்தையருக் கணியனைய சானகியார்
>   பேரழகு மவர்தங் கற்பும்
> ஏந்துபுயத் திராவணனுர் காதலுமச்
>   சூர்ப்பணகை இழந்த மூக்கும்
> வேந்தர்பிரான் தயரதனுர் பணியினலே
>   வெங்கானில் விரதம் பூண்டு
> போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனுர்
>   பெருந்தவமாய்ப் போயிற் றம்மா

என்று பிற்றைநாள் புலம்பிய மண்டோதரி இம்மூக்கின் முக்கியத்தை நன்கறிந்து இடையிலே அமைத்தாள். இம்மூக்கரி காரியம் இராமனேசெய்தல் அழகன்று. 'பெண்ணுட்ட மொட்டேன் இனிஇப்பேருலகத்திலே' என்று வஞ்சினங்கூறிய இலக்குவன் கைகளே இச்செய்கைக் குரியன. இதனைக் கருதுங்கால் 'பெண் நாற்றம் ஒட்டேன்' என்றிருக்குமாயின் விளைவதுநோக்கி இப்பாடத்தின் பொருள் சிறக்கும்போலும். வான்மீகத்தின்படி முன்னரே தாடகையின் மூக்கறுத்து இலக்குவன் கை பழகியுளான். இப்பழக்கத்தைச் சூர்ப்பணகைக்குப் பின்னர் இருபெரும் நூல்களின் முறைப்படியும் அரக்கி அயோமுகி இடத்துஞ் செலுத்தினன். ஆயினும், இவ்வண்ணம் கதையின் நிகழ்ச்சிக்குமாத்திரமன்றிக் கம்பர்தம் மகிழ்ச்சிக்கும் இலக்குவன் மற்றிருவரோடும் கானகம் வந்தனன் என்னினும் என்னலாம். இராமனைப் பணிந்தார் கம்பர், பரதனை வியந்தார், மற்று, அவருடைய அருமைச் செம்மலோ இலக்குவனேயாதலின் அவனை இறையேனும் விட்டுப் பிரிய மனமிலராய்த் தன் கண்கடவாது காக்கும்பொருட்டுக் கொணரநேரிட்டதென்பதுமொருகாரணமாகலாம். தன்பால் இழைத்த பிழையெல்லாம் சலியாமற் பொறுத்துப் பிறர்தீங்கைப் பொறு தழல்கின்ற இவ் வள்ளலண்ணலைத் தீர்ந்துசெல்ல எந்தக் கலைஞர் மனங்கொள்வார். இவன் வந்திரானேல், இந்நூற்சுவையின் பெரும்பகுதியை இழந்திருக்குமிவ்வுலகம்.

இன்னவர் மூவரையும் சுமந்திரன் தேரிற் கொண்டேகினன். மன்னவனை விட்டு நீங்கலாத் தேவியரும்

எழுது சித்திரங்களுந் தவிர அம்மாநகர்வாசிகள் அனைவரும் அழுதகண்ணினராய் உடன் தொடர்ந்தனர். தன் கான்முளைக்கு நேர்ந்தவித் துன்பத்தைக் காணலாற்றுக் கதிரவன் அத்தகிரி சென்றடைந்தபின்,

> அந்தியில் வெயிலொளி யழிய வானக
> நந்தலில் கைகயன் பயந்த நங்கைதன்
> மந்தரை யுரையெனுங் கடுவின் மட்கிய
> சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே.

கோதமன்சாபத்தால் நிரந்தரம் இமைப்பிலாநெடுங்கண் நிரம்பிய இந்திரன் உருவென விண்மீன்களோடு வானகம் விளங்கியது. அப்பொழுது அனைவருஞ் சென்றொரு சோலையிற்றங்கினர். உடன்வந்த சேனையும் ஊணுறக்கமின்றி அழுது விம்மிப்பின் அயர்ந்தயர்ந் தொருவரொருவராய் அயலிற் றுயில்போயினர். நளினத்துள் குவளை முகிழ்த்தன்ன கண்ணுறங்கினர் சில பருவமங்கையர். செவிலியர் துடையிலே சில கன்னியர் தூங்கினர். மகவு முலைவருடச் சில மகளிர் உறங்கினர். மயிலென அனமெனச் சில மாதர் கண் வளர்ந்தார்.

> சம்பக நறும்பொழில் களிற்றருண வஞ்சிக்
> கொம்பமூ தொசிந்தன வெனச்சிலர் குழைந்தார்
> வம்பளவு கொங்கையொடு வாலுகம் வளர்க்கும்
> அம்பவள வல்லிக ளெனச்சில ரசைந்தார்

[சிலர், சண்பக நறுஞ்சோலையில், வஞ்சிக்கொடிகள் அழுது ஒடிந்து கிடப்பதுபோல் வாடிக்கிடந்தனர். சிலர், கச்சணிந்த முலைகளோடு மணல் வளர்க்கும் அழகிய பவளக் கொடிபோல் அயர்ந்துகிடந்தார்]

மைந்தர்களும் வாரணங்களென்னப் படுத்து அயர்ந்தனர். இராமன் வைகுதற்கேகும் அவ்வனத்தை அயோத்தியாக்கிவிடுவதென்னும் அன்போடுதொடர்ந்துவரும் அச்சனங்களை என்ன தேற்றியும் விலக்குவதரிதென உணர்ந்த செம்மல், இச்செவ்விதேர்ந்து சுமந்திரனைநோக்கி, "எந்தாய்,இரதத்தை நீஅயோத்திக்கு ஓட்டிச்செல். நானும் சானகியும் இலக்குவனும்இவண் விட்டு நடந்து மறைகின்றேம். பின்னர் இச்சனங்கள் நம் இரதம் நகர்வயின் சென்றதைச் சுவட்டால் அறிந்து நானும்மீண்டனென்என்று அவர்களும் மீள்வார். இது யானுன்னை வேண்டிக்கொள்வது'' என்றான்.

இதுகேட்டசுமந்திரன், "நீயின்றி வறியனாய் மீண்டு யான் என் சொல்வேன், என் செய்கேன். உன்னையும் சீதையையும் இளையகோவையும் பாரிடைச்செலுத்திப்பழையநண்பினேன் நான் தீதின்றித் தேரிடை வந்தேன் என்னவோ! உன்னைவிட்டுச் செல்லும் நான் அரசனுக்குயமதூதனுகவோ! என்னினும்கைகேசியே எம் வேந்தனுக்குக் கடைமுறை நல்லவ ளாகாளோ '' என்று இன்னபல பன்னிப் படியுறப் புரள்தலும்,

> தடக்கையா லெடுத்தவற் றழுவிக் கண்ணநீர்
> துடைத்துவே றிருத்திமற் றினைய சொல்லினன்
> அடக்குமைம் பொறியொடு கரணத் தப்புறங்
> கடக்கும்வா லுணர்வினுக் கணுகுங் காட்சியான்

[அடக்குதற்குரிய ஐம்பொறிக்கும் மனத்துக்கும் அப்பாற் கடக்கின்ற தூய உணர்விற்கே எட்டும் தோற்றமுடையவனான எம்பெருமான், சுமந்திரனைக் கைகளால் எடுத்துத்தழுவிக் கண்ணீர் துடைத்து வேறு [illegible] பின்வருமாறு சொன்னான்]

18893

அந்தணர் நான்மறைக்கும் தேவாறிவிற்கும் பிறர்க்குமெட்டாச் செங்கண்மால் வால்உணர்வினுக்கு அணுகுங் காட்சியான் ஆதலினுற்றான், அவ்வுணர்வுசெவ்வின் வளரப்பெறு மாக்கள் அவனை அறவே மறுத்துவிடுகின்றனர். தன்னை மறைத்துவைத்துக்கொள்வதன்றியும் இவ்வண்ணம் மறுத்தும்வைத்துக்கொள்வதையும் தன் அலகிலா விளையாட்டுக்களில் ஒன்றுகவுடைய எம்பிரான், பிறவிமுறைக்குரிய காரணங்கள் கூறிச் சுமந்திரனைப் பலவாறு தேற்றி வசிட்டனைக்கொண்டுஅவன் தயரதனைத் தெருட்டுதற்குரியனவுங் கூறி முடித்தலும் தமியனுய் மீள ஒருவாறு உடன்பட்ட அச்சுமந்திரன் விடைகொள்ளும் முகத்தோடு சீதையை நோக்கவே,

> அன்னவள் கூறுவா ளரசர்க் கத்தையர்க்
> கென்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்
> பொன்னிறப் பூவையுங் கிளியும் போற்றுமென்
> றுன்னுமென் தங்கையர்க் குணர்த்துவா யென்றுள்.

பன்னெடுநாள் தான் இனிப் படவிருக்கும் துன்பத்தை உன்னுது பூவையுங் கிளியும் போற்ற வேண்டிய இவளது அறிகிலாத்துயர்க்குச் சோர்ந்தனன் சுமந்திரன். பிற்காலம் மாயமானை வேண்டுவதையும் இது இயற்கையாக்கியது. இனி, இலக்குவன்பால் விடைகொண்டு அவன்பொருட்டுக் கூறுவது யாதென வினவினன். குறையாச் சீற்றமுடைய இக்குரிசில், வஞ்சினம் மூளமூள வாயுறைசில வழங்குவான்.

> உரை செய்தெங் கோமகற் குதவிப் போக்கிய
> தரைசெறி செல்வத்தைத் தவிர மற்றொரு
> விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
> அரசனென் றின்னமொன் றுரையற் பாலதோ

[எம் தலைமகனுக்கு வாக்களித்துக் கொடுத்த செல்வத்தை அவன் அடையாமல் மற்றொரு, வாசனையுடைய கூந்தலையுடையவளுக்குக் கொடுத்துவிட்ட சத்தியசந்தனை, அரசனுக இன்னமும் மதித்து ஒன்று உரைக்கவேண்டுமோ]

எனத் தந்தையென்றும் பாராமல் அவன் மெய்ம்மையையே இளிவரச்சிரித்து, "ஆயினும் அவனுக்கு என் வாய்மொழியாக ஒன்று உரைக்கவேண்டு மென்பது உன் ஆசையானல்,

> கானகம் பற்றிநற் புதல்வன் காயுணப்
> போனகம் பற்றிய பொய்யில் மன்னர்க்கிங்
> கூனகம் பற்றிய வுயிர்கொ டின்னும்போய்
> வானகம் பற்றிலா வலிமை கூறென்றான்.

[தன்சொற் றவராத நல்லபுத்திரன் காட்டிலே காய்களைத் தின்றிருக்கத் தான் இன்சுவையுணவு விடாது புசித்துக் கொண்டிருக்கின்ற அந்தப்பொய்யில்லா மன்னருக்கு, இன்னும் விண்ணுலகம் அடையாமல் இவ்வூனோடு உயிரைச் சுமக்கின்ற வலியன்யான் இருக்கின்றேன் என்பதைக் கூறுவாய்—என்றான்]

பொய்யில் மன்னனோடு மற்றுளோரையும் வெறுக்கப் பின்னிடைந்திலன்.

> மின்னுடன் பிறந்தவாட் பாத வேந்தற்கென்
> மன்னுடன் பிறந்திலன் மண்கொண் டாள்கின்ற
> தன்னுடன் பிறந்திலன் தம்பி முன்னலென்
> என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால்.

[பிரகாசத்தோடுகூடிய வாளுடைய பரதவேந்தினிடத்தில்—என் மன்னனுகிய இராமனுடன் நான் பிறக்கவில்லை. இந்த மண்ணைக் கைப்பற்றி ஆள்கின்ற அவனுடன் பிறக்க

வில்லை. சத்துருக்கனுக்கும் நான் தமையன் அல்லன். என்னோடு நானே பிறந்த நான் வலியனுயிருக்கின்றேன் என்று கூறுவாய்—என்றான்]

தான் மௌலிகவிப்பான் நிற்கவும்வேண்டாது வேந்தன் சொற்கே அடிமையாய் அரசுகைவிட்டதன்றியும் உடன்வரற்கும் ஒவ்வாது தன்னை முன் தடுத்தமையின் இராமனுடன் பிறந்தமையை மறுத்து வெறுத்தனன் இலக்குவன். பரதனையும் அவனையே சார்ந்துள சத்துருக்கனையும் மறுத்தது புதுமையன்று. ஆதலின் தன்னுடன் பிறந்தவன் தானேயாய் நின்ற தன் குன்று வலிமையைக் கூறலுற்றான். மேலினி இவன் இவ்வண்ணம் பழிமொழிகள் பெருக்காமல்

ஆரியன் இளவலை நோக்கி யையநீ
சீரிய அல்லன செப்பல்

என்று தகைந்தபின் சுமந்திரன்தொழுதெழுந்து பரியும்நெஞ்சினனுய்த் தேர்மேற்கொண்டு தன்கல்விமாட்சியால் ஒருவரும் உணராமல் ஓட்டிப்போயினன். அதன்பின்,

தையறன் கற்புந்தன் தகவுந் தம்பியு
மையறு கருணையு முணர்வும் வாய்மையுஞ்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயின னல்லி னுப்பனே.

தன் தகவினையும் உடன்கொண்டு சென்றான் இராமன் என இங்குச் செப்பலுற்றது, பரதன் முதலியோர்பால் அவன் தகவின்றி வான்மீகர் நூலினுள் ஏவிய வசைகளை இந்நூலிலும் வழங்காமையைக் காட்டுதற்கேபோலும்.

இருளினூடு செல்லும் இராகவன் முதலியோர் இடருருவகை இந்துவந் தெழுந்த கொள்கையைக் கம்பர்பிரான்,

பொய்வினைக் குதவும் வாழ்க்கை
யரக்கரைப் பொருந்தி யன்னார்
செய்வினைக் குதவு நட்பாற்
செல்பவர்த் தடுப்ப தேய்க்கு
மைவிளக் கியதே யன்ன
வயங்கிருள் துரக்க வானங்
கைவிளக் கெடுத்த தென்ன
வந்தது கட்வுட் டிங்கள்

[வஞ்சனைத் தொழில்களுக்கு உதவியாயிருக்கும் வாழ்க்கையுடைய அரக்கரைச்சேர்ந்து அவர் செய்யுங்காரியங்களுக்குத் துணையாயிருக்கும் நட்பினால் அவர்களுக்குப் பகையாய் வரும் இவர்களைத் தடுப்பது போன்றதும், மையை விளக்கியது போன்றதும் ஆன அம் மிகுந்த இருளை விலக்கும் வண்ணம், ஆகாயந்தான் ஒரு கைவிளக்கு எடுத்துக் காட்டியதுபோல் தெய்வத்தன்மை வாய்ந்த சந்திரன் தோன்றியது]

என்ற வோர் தற்குறிப்பேற்றச் சித்திரம் அரிதின் தீட்டுகின்றார். "ஏறனுற்கிருளைநீங்கக் கைவிளக்கேந்தியாங்கு, வீறுயர் மதியந்தோன்ற..........." என வரும் சீவகசிந்தாமணிச் செய்யுளை நினைக்குங்கால் கலைமதியைக் கைவிளக்காக்குமிது கம்பரின் புதுமையன்றெனத் தோன்றலாம். ஆயினும் வருணனைகளைக் கூட்டுவதற்கும் அதனை யெடுத்தோர் சித்திரமாய்த்தீட்டுவதற்கும்உள்ளவோர் வேறுபாடுதிருத்தக்கதேவருக்கும் கம்பருக்குமிடையே இங்குளது. கைவிளக்கை ஏந்தியவர் யாவரென்பதைச்' சிந்தாமணியுடையார் செப்பினாரலர். எல்லாவற்றையுஞ் சொல்லித்தான் வைக்கவேண்டும் என்ற நியதி கவிகளின் பொருட்சுவைக்கு இன்றியமையாத தன்றென்பதுண்மையே. ஆயினும், அவர் சொல்லாதுவிட்ட குறை, நாம் நமது கருத்தினால் சேர்த்துக்கொள்ளக் கூடியதாயிருத்தல் வேண்டும். தேவரது பாட்டில் அது இபலாமையுன்னிக் கம்பர் அக் கைவிளக்கெடுத்ததும் வானமெனச் சேர்த்து அங்குச் சொற்களின் கூட்டமாயிருந்ததை இங்குச் சித்திரமாய்த் தீட்டிமாற்றினர். வானமெடுத்த விளக்காவதன்றி மீண்டும்,

மருமத்துத் தன்னை யூன்று
மறங்கொடும் பாவந் தீர்க்கும்
உருமொத்த சிலையி னுரை
யொருப்படுத் துதவி நின்ற
மருமத்தின் விளைவை யெண்ணிக்
களிப்பொடுங் காண வந்த
தருமத்தின் வதன மென்னப்
பொலிந்தது தனிவெண் டிங்கள்

[அவ்வொப்பற்ற வெண்மையான சந்திரனது, தன்னை (தருமத்தை) உயிர்நிலையில் தாக்கும் பொல்லாத கொடிய பாவத்தினை ஒழிக்கும் இடியொத்த வில்லுடைய இராம இலக்குமணரை வனத்திற்கு வரும்படி செய்து உதவிபுரிந்த தனது கருமத்தின் பயனை நினைத்துக் களிப்பொடுங் காண வந்த தருமத்தின் முகமேபோலப் பொலிந்தது]

என்று தன்னுடைய குறிப்பை எண்ணிய பெருமையோடும் ஏற்றிப் பாடுவார். சந்திரனைத் தருமத்தின் முகமென்னும் உருவகச் சிறப்பு மிக உயர்ந்தது. அதனினும் சிறந்தது அத்தருமத்திற்கேயும் ஒரு கருமம் அமைத்தது. தான் செய்த வோர் நற்கருமத்தின் பயனன்றோ இன்று தன்னைத் துன்புறுத்தும் மறக்கொடும் பாவங்களைத் தீர்ப்பதற்கு இராமன் தலைப்பட்டான் என்று தருமம் களிப்பெய்தியதால் முகம் பொலிதரத் தோன்றுஞ்செவ்வியைக் காணக் கண்கள் ஆயிரம் வேண்டும். தான் செய்த எந் நற்கருமத்தின் விளைவு இது என்பதை ஒரு நால் தருமமே மறந்திருக்கலாமாயினும், முன் கோசிகமுனிவனுடன் இராமன் மிதிலையை நெருங்கிய நாள்,

நிரம்பிய மாடத் தும்பர்
நிரைமணிக் கொடிக ளெல்லாம்
தரம்பிற ரின்மை யுன்னித்
தருமமே தூது செல்ல
வரம்பில்பே ரழகி னுளை
மணஞ்செய்வான் வருகின் றனென்
றரம்பையர் விசும்பி னுடும்
ஆடலி னுடக் கண்டார்

என்ற செய்தியைக் கருத்துட் கொள்ளவோ மெனில், முன் இராமனுக்குஞ் சீதைக்கும் மணத்தூது சென்ற நற்கருமத்தின் விளைவாயிற் றென்பதை நாம் மறக்கமாட்டோம். தரம் பிறர் இன்மையுன்னித் தன் கருமத்தின் தகுதியையே கடைபிடித்து அத்திருமணத் தூது சென்றதேயன்றித் தருமந்தான் அக்கருமத்தால் தனக்கு விளையக்கூடிய நற்பயனை முன் நினைத்திலது. பயன் கருதாது செய்தவினையேனும் அதன் விளைவு இன்று தோன்றுகின்றது. இவ்வாறே தானே வந்து தோன்றுங்கால் அதனை மகிழலாகாது என்னும் விதியில்லையாதலின், அறத்தால் எய்திய இன்பத்தையுன்னித் தருமம் இன்று களிப்புடன் தயாதன் புதல்வனைக் காணவந்தது. கடமையைச் செய்தார் கொள்ளுங் களிப்பிது. தருமமானது தன்னுடைய தன்மையைத் தானேஇவ்வண்ணந் தெரியக் காட்டும்படி செய்யவல்ல உரிமையும் ஆற்றலு முடையார் கலைபொலிந்த கருத்துடைய கம்பர்பெருமானே யாவார்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—வெண்பா

[633-வது பக்கத் தொடர்ச்சி]

பஃறொடை வெண்பா.

நான்கடிகளுக்கு மேற்பட்டுவரும் வெண்பா பஃறொடை வெண்பா எனப் பெயர் பெறும். வெண்பாவிற்குரிய பொதுவிலக்கணங்களெல்லாம் பெற்று ஐந்து முதலிய பலவாகிய அடிகளில் வருவது இதன் இலக்கணம். இதுவும் மற்ற வெண்பாக்களைப்போல், எல்லா அடிகளும் ஒரேவகையுடைய ஒரு விகற்பத்தினாலேனும், அல்லது அவ்வாறு இல்லாத பல விகற்பத்தினாலேனும் வரலாம்.

கருந்தாது கொல்லுங் கருங்கைத்திண் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றிற்றொறுஞ் சென்றுசிலர் தூங்க
இருந்தேங் களிதூங்கி யாமேமற் றம்ம
வருந்தா தலர்தில்லை யம்பலத்திற் றாங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

வெண்டளை பிறழாமல், இயற்சீரும் காய்ச்சீரும் விரவி நான்கு சீர்கள் கொண்ட அடிகளால் நடந்து, ஈற்றடி முச்சீருடையதாய்ப் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிவதால் இது வெண்பா. நான்கடிகளுக்கு மேற்பட ஆறடிகள் உடைமையால் பஃறொடை வெண்பா. எல்லா அடிகளும் ஒரேவகை எதுகை பெற்றிருப்பதால் இது ஒரு விகற்பப் பஃறொடைவெண்பா.

ஒஓ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

முதலடி ஒரு விகற்பமாயும், மற்ற நான்கடிகள் வேறோர் விகற்பமாயும் அமைந்திருப்பதால், இது ஐந்தடிகளால் வந்த இருவிகற்பப் பஃறொடைவெண்பா.

மலைமேன் மரங்கொணர்ந்து மாண்புடைத்தார் செய்த
நிலையொத்த வீதி நெடுமாடக் கூடல்
விலைத்தயிர் கொள்ளீரோ வென்பாள் முலையிரண்டும்
சோழ னுறந்தைக் குரம்பையோ தொண்டைமான்
வேழஞ்சேர் வேங்கடத்துக்கோங்கரும்போ வீழ்த்துத்
தச்சன் கடைந்த வினைச்செப்போ வச்சுற்றுள்
அன்னமோ வாய்மயிலோ வாரனுர்நோய் செய்தாளை
யின்னுந் தெரிகிற் றிலம்.

இது எட்டடிகளால் வந்த பஃறொடை வெண்பா. இதனில் முதல் மூன்றடிகளும் ஒரு விகற்பம். அடிகள் நாலும் ஐந்தும் ஒரு விகற்பம். ஆறுவது அடி தனிவிகற்பம். அடிகள் ஏழும் எட்டும் ஒரு விகற்பம். இப்படி அப் பஃறொடைவெண்பா எட்டடிகளால் பலவிகற்பங்கள் பெற்று வந்தது.

வெண்பா ஈறு.

வெண்பாவிற்குரிய செப்பலோசையை ஊட்டுவதற்கு முக்கிய கருவியாய் இருப்பன, ஈற்றடி சிந்தடியாயிருப்பதும் அவ்வடியின் ஈற்றுச் சீரின் வாய்பாடும் ஆகும். இவ்வாறு வெண்பாவின் ஈற்றில் சிறப்பாய் வரவல்ல சீர்கள் எவை என்பதைச் சிறிது உணர்ந்து கொள்ளல் நலம்.

மூவசைச்சீர் ஒருபோதும் வெண்பாவின் ஈற்றில் வருதலாகாது; வந்தால் பிழையாம். ஈரசைச்சீர்கள் வரலாம்; ஆயினும் ஈரசைச் சீர்களிலும் சிலவே வருதல்கூடும். தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்னும் இந்நால்வகை இயற்சீர்களில், கருவிளமும் கூவிளமும் ஒருபோதும் வெண்பாவின் ஈற்றில் வாரா; வந்தாற் பிழையாம். இனி, தேமா புளிமாச் சீர்களிலும் சில வாய்பாடுகளே வரும். கண்டேன், நீயே, சொல்லி, வாளை போல்வனவும் தேமாச் சீர்களே. பரிதி, அளாவி, கழுத்தை, கொடுபோ போல்வனவும் புளிமாச்சீர்களே. இன்னவை வெண்பாக்களின் ஈற்றில் வாரா; வரின் பிழையாம். தேமாச் சீர்களில் விட்டு, மற்று, நேர்ந்து, பேசு, சொல்லு, என்பன போன்றும், புளிமாச் சீர்களில்,—பார்த்து, அழுது, கதவு என்பனபோன்றும், உகரத்தை ஈற்றில் உடையவைகளே வருதற்கூடும். ஆதலாற்றான் வெண்பாவின் ஈற்றில் வரவல்ல ஈரசைச் சீர்களை தேமா புளிமா என்னும் வாய்பாட்டால் குறிக்காமல், நேர்நேர்ச் சீரைக் காசு என்னும் வாய்பாட்டாலும், நிரைநேர்ச்சீரைப் பிறப்பு என்னும் வாய்பாட்டாலும் குறிக்கவேண்டி யிருக்கின்றது. காசு என்னும் வாய்பாட்டில் வரும் ஈரசைச்சீரை நேர்பசை என்றும், பிறப்பு என்னும் வாய்பாட்டில் வரும் ஈரசைச்சீரை நிரைபசை என்றும் அழைப்பதுண்டென்று முன்னரே கூறியிருக்கின்றோம். காசு, என்று வாய்பாடு இருப்பதால், ஈற்றில்வரும் உகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரமாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணவேண்டா. உகரத்தை ஈற்றிலுடைய தேமாச்சீர் என்பதை மட்டுமே அவ்வாய்பாடு குறிக்கின்றது. அவ்வுகரம் குற்றியலுகரமாயு மிருக்கலாம் அல்லது முற்றியலுகரமாயுமிருக்கலாம். குற்றியலுகரத்திலும், காசு பிறப்பு என்னும் அவ்விரு வாய்பாடுகளிலும் எந்தத் தொடர்க் குற்றியலுகரமும் வரலாம்.

கல்பயில் கானங் கடந்தார் வரவாங்கே
நல்லிசை யேறொடு வான நடுநிற்பச்
செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு.

என்னும் இவ் வின்னிசைவெண்பா, காசு என்னும் வாய்பாட்டுத் தேமாச் சீரால் இற்றது.

மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுநினக்கு—நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று.

இந் நேரிசைவெண்பாவின் ஈற்றிலுள்ள 'கூற்று' என்பது, உகரத்தை ஈற்றிலுடைய தேமாச்சீராதலால் (அவ்வுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாயினும்) காசு என்னும் வாய்பாட்டில் அடங்கும்.

பிறப்பு என்னும் வாய்பாடும், அப்படியே உகரத்தை ஈற்றிலுடைய புளிமாச்சீரைக் குறிக்கின்றதே

யன்றி, வன்றொடர்க் குற்றியலுகரந்தவிர மற்ற உகரங்களை விலக்குகின்றதென்று கொள்ளலாகாது.

மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்நுகரும்
சீத முறுவ லறிவழிக்கு—மீதலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்தலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு

இந் நேரிசைவெண்பாவின் ஈற்றிலுள்ள யிவர்க்கு என்னும் உகரத்தையீற்றிலுடையபுளிமாச்சீர், பிறப்பு என்னும் வாய்பாட்டிலடங்கும். இவ்வுகரம் வாய்பாட்டில் இருப்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரம். அப்படிக்கின்றி,

குலமு முருவுங் குணமுந் திருவு
நல்முமுயர் கல்வி நயமும்—வலமும்
செருக்கைவிளைக் கின்றனவிச் செம்மற்கு நாளுந்
திருக்கறுநன் மாண்பிற் செறிந்து

ஈற்றிலுள்ள உகரம் மென்றொடர்க் குற்றியலுகரமாயினும், 'செறிந்து' என்னும் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டிலேயே அடங்கும். அப்படியே

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு.

இதன், ஈற்றிலுள்ள, 'உலகு' என்னும் உயிரீற்றுக் குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய புளிமாச்சீரும் 'பிறப்பு' என்னும் வாய்பாட்டி லடங்கும். இனி,

பாலன் தனதுருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன்று நீகிடந்தாய் மெய்யென்ப—ராலன்று
வேலைசூழ் நீரதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு

எனவும்,

எளிதி லிரண்டடியுங் காண்பதற்கென் னெஞ்சே
தெளிதிற் றெளிந்துரைப்பன் செவ்வே—யளிகள்
பொருந்தா ரிரணியனைக் கொல்லுற் றரியா
யிருந்தான் றிருநாம மெண்ணு

எனவும்,

தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே—ஒருபொழுது
மில்லா தனவு மிரவே யிகழ்ந்தெவருங்
கல்லா தனவுங் கரவு

எனவும், முற்றியலுகரத்தை ஈற்றிலுடைய தேமா புளிமாச்சீர்களும் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளில் அடங்கி வெண்பாவிற்கு ஈறாகக் கூடும். ஆயினும் முற்றியலுகரத்தால் முடிவது மிகவும் அருமையாவதுடன், குற்றியலுகரத்தில் முடிவதுபோல் அத்துணைச் சிறப்புடையதன்று.

வெண்பா, ஓரசைச் சீரினும் முடியலாம், அவ்வசை நேரசையாகவேனும் நிரையசையாகவேனும் இருக்கலாம். நேரசைச்சீர் நாள் என்னும் வாய்ப்பாட்டாலும், நிரையசைச்சீர் மலர் என்னும் வாய்பாட்டாலும் குறிக்கப் படுகின்றன. நாள், என்றமையால், நெடிலும் மெய்யுமாய்ச் சேர்ந்தநேரசை மாத்திரமும், மலர் என்றமையால் இருகுறிலும் மெய்யுமாய்ச் சேர்ந்த நிரையசையும் தவிர மற்ற ஓரசைச்சீர்கள் வரலாகாதென்று எண்ணவேண்டா. க, கல், கா, கால் என்னும் நான்கு நேரசைகளும் நாள் என்னும் வாய்பாட்டிலும், கட கடம் கடா கடாம், என்னும் நான்கு நிரையசைகளும் மலர் என்னும் வாய்பாட்டிலும் அடங்கும். இவை யெல்லாம் ஈற்றில் வரலாமாயினும் பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் செப்பலோசைக்குரியனவாய்ப் பயின்று வருவன கல் கட கடம் என இம் மூன்றுவகை ஓரசைச்சீர்களே யாகும்.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்

எனவும்,

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள

எனவும்,

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

எனவும் அவை வருவன காண்க. கால், என்பது போன்ற, நெடிலும் மெய்யுமாய்ச் சேர்ந்த நேரசைகள் வெண்பாவின் ஈற்றில் வருவதுண்டு.

இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்

எனவும்,

ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்

எனவும்,

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்

எனவும்,

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

எனவும் வருதல் காண்க. ஆயினும் உச்சரித்துப்பார்க்குமிடத்து இவ்வகை நேரசையீறு செப்பலோசையின் செம்மையைச் சிறிது குறைப்பதுபோல் தோன்றுகின்றது. முதல் காட்டிய குறள் வெண்பாவை,

இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணரவிரித் தோதா தவர்

என மாற்றி உச்சரிக்குங்கால் ஓசைசெவ்விதாய் அமையுமாறு புலப்படும். எனினும்,

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.

எனவும்,

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

எனவும்,

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடான்
மாட்சியின் மாசற்றார் கோள்

எனவும் வரும் சில வெண்பாக்கள், தோள் 'கோள்' என முடியினும் செவ்விய செப்பலோசை வாய்ந்து இசைக்கவுங் காண்கின்றோம்.

க, கா, கடா கடாம், என்பனபோன்ற அசைச்சீர்களும் வெண்பாவின் ஈறாக அருகிவரும். எனினும் அவை சிறப்புடையனவாகா.

நுண்மைசால் கேள்வி நுணங்கியோர் சொல்லைபாய்
தொன்மைசா னன்மருந் து

எனவும்,

பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூறக் கற்குழியு மே

எனவும்,

உருவத்தா னீண்ட வுயர்மாங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா

எனவும்,

அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்

எனவும் அவை வருவன காண்க. இவைகளில் தனிக்குறிலால் முடிவது முற்றிலுஞ் சிறப்பற்றதாகும்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[624-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

327. இஞ்சிசூ ழெரிபொன் மாடத்
திந்திரன் மிசைந்த நாமச்
சஞ்சய முடைய கோமான்
றாண்முனை தரணிக் கெல்லாம்
அஞ்சுநீ ரலங்கல் வேலான்
அருஞ்சய னவனை நங்கள்
மஞ்சுசூழ் மலைக்கோர் சூளா
மணியெனக் கருது மன்னா. 91.

இஞ்சிசூழ் எரிபொன் மாடத்து இந்திரன் - மதிலாற் சூழப்பட்டதும் பிரகாசிக்கின்ற பொன்னாற் செய்யப்பட்டதுமான மாளிகையில் வாழும் இந்திரனுடைய வீரத்தையும் புகழையும், மிசைந்த - உண்ட (அழித்த) நாம சஞ்சயம் உடைய - அச்சத்தை உண்டாக்கும் படைவகுப்பை யுடைய, கோமான் - அரசனுடைய, தாள்முனை - மகன், தரணிக்கு எல்லாம் அஞ்சுநீர் அலங்கல் வேலான் - உலகங்களுக்கு எல்லாம் அஞ்சுந்தன்மையைச் செய்யக்கூடிய மாலை பொருந்திய வேலையேந்தியவனாகிய, அருஞ்சயன் - அருஞ்சயன் என்னும் பெயரைக் கொண்டவன் ஆவான் அவனை-அவனை, மன்னா-மன்னவனே, நங்கள் மஞ்சுசூழ் மலைக்கு ஓர் சூளாமணி என கருது - மேகங்கள் சூழ்ந்த நம்முடைய வித்தியாதரவுலகத்துக்கு ஒரு சூளாமணிபோல்பவனென்று நினைப்பாயாக.

மிசைந்த - உண்ட, இங்கு அழித்த என்னும் பொருளில் வந்தது, 'அவுணராயோர் திறலுண்ட வடிவேலான்' என்றவிடத்திற்போல சஞ்சயம் - படையின் கூட்டம். தாள்முனை - கால்முனை.

328. ஈங்கிவர் தம்முள் யாவன்
இலங்கிரும் பவழச் செவ்வாய்க்
கோங்கிவர் குவிமென் கொங்கைக்
கொம்பினுக் குரிய காளை
ஆங்கவ னன்னை யாராய்ந்
தறிந்தருள் செய்க வென்றான்
வாங்கிரும் பரவை முந்நீர்
மணிகொழித் தனைய சொல்லான் 92.

ஈங்கு இவர் தம்முள் - இப்பொழுது நான் எடுத்துரைத்த இவ்வரசிளங் குமரருக்குள், இலங்கு இரும் பவழச்செவ்வாய் - விளங்குகின்ற உயர்ந்த பவளம்போன்ற செவந்த வாயையும், கோங்கு இவர் குவி மென் கொங்கை - கோங்கரும்பை ஒத்த குவிந்த மென்மையான தனங்களையும் உடைய, கொம்பினுக்கு-நம்மகளுக்கு, உரிய காளை யாவன் - கணவனாதற்குத்தகுந்தகுமரன் எவனோ, ஆங்கு அவன் தன்னை, அவனை, ஆராய்ந்து அறிந்து - ஆலோசித்துத்தேர்ந்து, அருள் செய்க - உரைத்தருளுக (என்று), வாங்கு இரும் பரவை முந்நீர் மணி கொழித்தனைய சொல்லான் - அலைகள் மடிந்துவிழும் பரந்தகடல் முத்துக்களைக் கரையில் கொணர்ந்து குவித்தாற்போன்ற வார்த்தைகளைப் பேசவல்லவனாகிய பவச்சுதன், என்றான் - சொன்னான்.

'கோங்கு இவர்' என்பதில் இவர் என்பது ஒருவமஉருபு. கொம்பு, காளை இரண்டும் உவமையாகுபெயர்.

வேறு

329. மன்னர் நீண்முடி மென்மணித் தொத்தொளி
துன்னு சேவடி யாற்குச் சுருங்கவே
பன்னு கேள்விப் பவச்சுதன் சொல்லலும்
அன்ன தேயென்றெல் லார்களும் ஒட்டினார். 93.

மன்னர் - பல மன்னர்களின், நீள்முடி மென்மணி தொத்து ஒளி துன்னு-நீண்ட கிரீடங்களில் இழைத்த நல்ல மணிகளின் திரண்ட ஒளிபடியும், செம்மை அடியாற்கு - செவந்த பாதங்களை உடைய ஜ்வலன ஜடி மன்னனுக்கு, பன்னு கேள்வி பவச்சுதன், சிறப்பித்துக் கூறப்படும் கேள்வியறிவு நிரம்பிய பவச்சுதன் என்னும் மந்திரி, சுருங்கவே சொல்லும் - இவ்வாறு சுருக்கமாகத் தனது கருத்தை சொல்ல(க்கேட்டு), எல்லார்களும் - மற்றுள்ள மந்திரிமார்கள் அனைவரும், அன்னதே என்று - அதுவே தங்களுடைய அபிப்பிராயமும் என்று, ஒட்டினார் - சம்மதத்தைத் தெரிவித்தார்கள்.

ஒட்டுதல் - சம்மதித்தல், உடன்படல்.

330. அல்லி நாண்மல ராருமுத் தாரமும்
வல்லி யாங்கணி சாந்தும் வனைந்துராய்
மல்லி னன்மலி மார்பற்கு மற்றிவை
சொல்லி னான்சுத சாகரன் என்பவே. 94.

அல்லி நாள் மலர் ஆரும்-அகவிதழ்களோடு கூடிய புதிய ஆத்திமலர் மாலையும், முத்து ஆரமும் - முத்து மாலையையும், வல்லி-காமவல்லிபோன்ற தனது தேவி, ஆங்கு அணி சாந்தும் - மார்பகத்தே பூசிய சந்தனத்தையும், வனைந்து உராய் - புனைந்து பரந்து, மல்லினால் மலி - மற்போர்ப் பயிற்சியால் உண்டாகும் வலிநிறைந்த, மார்பற்கு - மார்பனாகிய மன்னனுக்கு, சுதசாகரன் - சுதசாகரன் என்னும் மந்திரி, மற்று இவை சொல்லினான் - மற்றும் பின்வரும் இவ்விஷயங்களை எடுத்துச்சொல்லலுற்றான். (என்பவே - அசை).

ஆர்-ஆத்தி, இங்கு ஆத்திமாலை (ஆகுபெயர்); மலர் ஆரும் முத்தாரம்' என்றஒருதொடராக்கலும்ஒன்று. வல்லி - மாவல்லிக்கொடி, இங்கு மன்னன் தேவிக்கு உவம ஆகுபெயர். மல்-மற்போர்; இங்குஅதனாலுண்டாகும் வலிமைக்கு ஆகுபெயர்.

331. ஆழி யாள்கின்ற அச்சுவ கண்டன்மேற்
பாழி யாகின்ற திண்டோட் பவச்சுதன்
சூழி யானையி னாய்சொலப் பட்டன
ஊழி யாருரை யும்மொத் துளகண்டாய். 95.

சூழி யானையினாய் - முகபடாம் அணிந்த யானையை உடைய மன்னவனே, சூழி ஆள்கின்ற அச்சுவ கண்டன்மேல் - கிகிரியை யுருட்டி அரசாளும் அச்சுவகண்ட னென்னும் அரசனைப்பற்றி, பாழி ஆகின்ற திண் தோள் பவச்சுதன் - அகலமான வன்மையோடு கூடிய தோள்களையுடைய பவச்சுதனாகிய மந்திரியால், சொல்லப்பட்டன - சொல்லப்பட்ட விஷயங்களும், ஊழியார் உரையும் ஒத்துள - நீண்ட வயதினராகிய முதியோர் வார்த்தையும் ஒத்திருக்கின்றன; (கண்டாய் - அசை).

ஊழி - நெடுங்காலம், நீண்ட ஆயுள் சொலப்பட்டன - (உம்மைத் தொகை) சொல்லப்பட்டனவும்.

332. ஆயி னுஞ்சிறி துண்டறி வண்டினம
பாயி னும்பனிக் கும்படர் கோதைதன்
வேயி னும்பணைக் கின்றமென் றோள்பிறர்
தோயி னும்பகை யாஞ்சுடர் வேலினாய். 96.

சுடர்வேலினாய் - பிரகாசிக்கும் வேலையுடைய மன்னா, ஆயினும் - அவ்வாறாயினும், சிறிது உண்டு-நான்

சொல்லவேண்டிய சில உள. அறி-அவற்றைக்கேட்டு உணர்வாயாக. வண்டு இனம் பாயினும் பனிக்கும் - வண்டுக் கூட்டம் வந்து விழுந்தாலும் நடுங்கும், படர் கோதைதன் - பரந்த கூந்தலோடு கூடிய நமது சுயம்பிரபையின், வேயினும் பணைக்கின்ற மென்தோள் - மூங்கிலைக்காட்டிலும் மெல்லியவும் பருத்தவுமான தோள்களை, பிறர் தோயினும் - வேறு எவரேனும் (மணம்புரிந்துகொண்டு) தழுவி அணைந்தாலும், பகை ஆம் - அச்சுவ கண்டனுக்கும் நமக்கும் விரோதம் உண்டாகும்.

---

333. வண்ட வாமுடி மன்னருண் மற்றவன்
தண்ட மாற்றுநர் தாமிலை யாற்சிறி
துண்டி யானுரைப் பானுறு கின்றது
விண்டு வாழுநர் மேனகு வேலினாய். 97.

விண்டு வாழுநர்மேல் நகு வேலினாய் - பகைத்து வாழ்பவர்மீது நகைசெய்து சென்று தாக்கும் வேலாயுதத்தை ஏந்திய மன்னா, வண்டு அவாம் முடி மன்னருள் - வண்டுகள் (தேனை) விரும்பி விழும் பூமாலை மிலைந்த கிரீடத்தை அணிந்த அரசர்களில், அவன் தண்டம் ஆற்றுநர் - தாம் அச்சுவகண்டனுடைய படைவலியை (எதிர்த்து நின்று) தாங்கவல்லவர், மற்று இல்லையால்-வேறொருவரும் இலர். ஆகையால் யான் உரைப்பான் உறுகின்றது-நான் சொல்லப்புகுவதாகிய, சிறிது உண்டு-சிறிய விஷயம் ஒன்றுஉளது. தண்டம் - படை (இங்கு ஆகுபெயர்). 'தண்டம்மாற்றுநர் எனப்பிரித்து, அவனுடைய ஆஞ்ஞையை மாற்ற (மீறி நடக்க) வல்லவர் என்றுரைப்பினும் அமையும்.

---

334. போக மாண்டவிச் சேடியோர் பொன்னகர்க்
கேக நாயக னாயினி தாள்பவன்
மேக வாகன னென்றுளன் வீழ்மத
வேக மால்களி றும்மிகு வேலினன். 98.

போகம் மாண்ட-பல்வகை இன்பங்களும் நிறைந்த, இச்சேடி ஓர் பொன்நகர்க்கு - இந்த வித்தியாதரவுலகத்தில் உள்ள தொரு பொன்நகரத்துக்கு, ஏக நாயகனாய் - தனியரசனாய், இனிது ஆள்பவன் - இனிதாக அரசுபுரிவான், மேகவாகனன் என்று உளன் - மேகவாகனன் என்பவன் ஒருவன் இருக்கின்றான்; வீழ்மதம் வேகமால் களிறும் இகும்வேலினன்-அவன் (இடைவிடாது) ஒழுகும் மதப் பெருக்கையுடைய வேகம் பொருந்திய பெரியயானையையும் தாக்கி வீழ்த்தும் வேலாயுதத்தையுடையவன்.

'களிறும் மிகும்' எனப் பிரித்து, களிற்றையும் குத்திக் கடந்து செல்லும், என்றுரைப்பினும் அமையும்.

---

335. நாகமாலைகண் மேனகு வண்டினம்
ஏக மாலைய வாயிசை யைவிடாத்
தோகை மாமயில் பொற்சுரி கூந்தலாள்
மேக மாலினி யென்றுரை மிக்குளாள். 99.

336. தேவி மற்றவள் தெய்வம் வழிபட
மேவி வந்தனன் விச்சுவ னென்பவன்
ஓவி றொல்புக ழானுளன் கூற்றமும்
ஏவி நின்றினி தாண்டிடு மீட்டினன். 100.

தோகை மாமயில் - விரிந்த தோகையை உடைய அழகுவாய்ந்த மயிலைப் போன்றவளும், நாக மாலைகள் மேல் - சுரபுன்னை மலர்மாலைகளின்மீது, நகு வண்டு இனம் - விளங்கும் வண்டுக் கூட்டம், ஏகம் மாலையவாய் - ஒரே வரிசையாகப் படிந்து, இசை ஐ விடா - ஒலித்தலைச் செய்தலை விடாத, பொன் சுரி கூந்தலாள் - அழகிய சுருண்ட கூந்தலை உடையவளுமான, மேகமாலினி என்று உரை மிக்கு உள்ளாள் - மேகமாலினி என்று மிக்க புகழ் பெற்றவள், தேவி - அம்மன்னன் தேவி ஆவாள். அவள் தெய்வம் வழிபட - அவள் கடவுளை வழிபட்டு வேண்ட, மேவி வந்தனன் விச்சுவன் என்பவன் - விரும்பி அவர்களுக்குப் புதல்வனாகத் தோன்றிய விசுவன் என்னும் பெயரை உடையவனை, ஓவு இல் தொல்புகழான் உளன் - நீங்காத பழமையான புகழை உடையவன் ஒருவன் இருக்கின்றான்; கூற்றமும் ஏவி நின்று இனிது ஆண்டிடும் ஈட்டினன்-அவன் யமனையும் தன் பணியைச் செய்யும்படி ஏவல் புரிந்து நின்று, இனிது ஆட்சிசெய்யும் வலிமை உடையவன்.

பொன் - பொற்பு, அழகு, ஈடு - பெருமை என்றுமாம்.

குலத்தாலழுங்கல்.

(நிலைமண்டில வாசிரியப்பா)

நீரும் நெருப்பும் நிகழ்வளி விசும்பும்
பாரும் பொதுவெனப் பகர்வது போல
ஆர்க்குஞ் சிலம்பணி ஆயிழை பாகன்
யார்க்கும் பொதுவே என்பதை அறிமின்
தீண்டப் படாமை யாண்டும் எவரும்
வேண்டத் தகாதாம் என்பதை உணர்மின்
பிறப்பான் மக்கட் பெரியோ ரென்று
சிறப்பாய்க் கூறும் தீங்கர் கூற்றைச்
செம்பொரு ளோதிய செந்நாப் போதார்
நம்பின ரல்ல ரென்பதை ஓர்மின்
சீர்தரு மறிவே சீரிய ராக்கும்
தேர்மின் தேர்மின் தியங்கா தின்றே
அன்பும் அருளும் உடையவாழ் வன்றே
பண்பும் பயனும் பற்றிய தாகும்
தீயவை தீய சீரியர் சிறக்க
தேயமும் வேந்தும் திகழ்ந்து பொலிய
மண்ணினர் அனைவரும் மாண்புறு கென்னக்
கண்ணுதற் றேவின் கருணைவேண் டுதுமே.

கும்பகோணக் கொசு.

நேரிசை வெண்பா.

1. தேம்குபுகழ் பெற்ற திருக்குடந் தைக்கொசுகு
தாக்கக்கும்ப கன்னன் றனக்கேயுந்—தூக்கம்
பிடிக்குமோ சற்றும் பிடிக்காதா மென்னிற்
கடிக்கிற் றுடிக்குமுடல் காண்.

2. குடந்தைக் கொசுகின் கொடுமைதனக் கஞ்சி
அடைந்தவர்கள் பொன்னுலகி லங்கும்-இடந்தேடி
நண்ணிநோ தீய நமனோர் மசகமென்று
கண்ணிமையா தேயுள்ளார் கள்.

3. குடந்தைக் கொசுகாணிற் கொன்றுவிடு மென்று
கடந்தவரும் வெல்லரிய காமன்—உடைந்தே
உருவந் தனைமறைத் துள்ளா னுலகின்
மரும மிதுவாம் மதி.

4. கும்பகோ ணத்தின் கொசுவருமென் றஞ்சியே
அம்புலியைச் சூடு மரனவனும்—கம்பித்து
வெங்கரித்தோ லைப்போர்த்தி வீறுபுலித் தோலு
அங்கியையுங் கையிலெடுத் தான். [டுத்தி

5. ஐந்து கடல்களுக் கப்பா லமைந்ததோர்
நந்துவெண் பாற்கடலை நண்ணியங்கு—டந்தைநகர்
தீமை யுளமசகம் சேர்ந்திடுமென் றஞ்சியே
ஆமையுரு வானன் அரி.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

எற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு 11,51,813.
பிரீமியம் வரும்படி 30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி 7,47,608
மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

எஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் லைஸில் இன்ஷுரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ,, ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும்
பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்
ஸ்ரீமான். மாந்தை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறாஸ்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்போருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்ஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்போருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9 நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தோகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.
மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	8	0	பையிண்டு செய்யாதது	10	0	0
காலிகோ கில்ட்	10	0	0	காலிகோ கில்ட்	11	8	0
ஆப்லெதர் கில்ட்	10	8	0	ஆப்லெதர் கில்ட்	12	0	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

சமீபத்தில் பர்மிங்காமில் கிறிஸ்துவ மதத்தினர் மஹாநாடு ஒன்று நடந்ததென்றும், அங்கே, வால்டர் என்னும் பாதிரியார், பழைய கோயில்கள் எல்லாம் சுகாதாரமற்ற முறையில் கட்டப்பட்டுள்ளன வென்றும், அவைகளெல்லாம் உடனே தீக்கிரையாக்கப்படவேண்டுமென்றும், புதிய முறையில் சுகாதார விதிகளின்படி புதிய கோயில்கள் கட்டப்படவேண்டுமென்றும் கூறினர் என்று லண்டன் செய்தி கூறுகின்றது.

***

"இந்தியாவில் இளம் குழந்தைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் புட்டிப் பாலைக் கொடுக்கின்றனர். இதனால் கட்டி முதலியநோய் குழந்தைகளுக்கு வருகின்றது. தாய்ப்பால் இல்லாத காலத்தில் குழந்தைகளுக்குக் கேழ்வரகை ஊர வைத்து அரைத்துப் பால் எடுத்து வெந்நீரில் கலந்து புகட்டுவது நல்லது. கட்டிவிழாது." என்று ஒரு தமிழ்வைத்தியர் அறிவிக்கின்றார்.

***

கிளாஸ்கோவில் சத்தியாக்கிரஹம்:—இங்கிலாந்தில் கிளாஸ்கோ நகரத்தில் பொதுமைதானங்களில் லைசன்ஸ்பெறாமல் பொதுக்கூட்டங்கள் நடைபெற அனுமதி இல்லையாம். இந்த லைசன்ஸ்முறையைப் பொதுஜனங்கள் விரும்பவில்லை. எனவே நான்கு மதப்பிரசாரர்கள் முதன்முதலாக ஒரு மைதானம் சென்று அங்குப் பிரசங்கம் நடத்தினர். இந்நால்வரும் போலீசாரால் கைதிசெய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். கிளாஸ்கோ நகரப்பிரதிநிதியான பார்லிமெண்டு அங்கத்தினர் இந்த லைசன்ஸ்முறையை அகற்றுவதற்கென ஒரு பிரேரபணையைப் பார்லிமெண்டில் கொண்டு வந்தார். பார்லிமெண்டு சபையினரால் இது ஏற்கப்படவில்லை. இதுவிஷயமாய்க் குழப்பம் ஏற்படவே இவ்வங்கத்தினர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். பின்னர் இச்சத்தியாக்ரஹ இயக்கம் வலியுற்றது. பார்லிமெண்டு அங்கத்தினர் சத்திபாக்கிரகத்தை ஆரம்பித்தார். இவர் கைதுசெய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அதற் கடுத்தநாள் அந் நகரவாசிகளில் 3000 பேர் திரண்டு பொதுக்கூட்டதை நடத்தினர். நகரம் முழுவதும் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெறுகின்றன என்று லண்டன் செய்தி தெரிவிக்கின்றது.

காந்தி அடிகளின் கடிதம்:—லண்டன் நியூஸ் கிரானிகல் ஆசிரியர்களில் ஒருவரான ராபர்ட் பார்னஸ் என்பவருக்குக் காந்திஅடிகள் எழுதிய கடிதச்சுருக்கம் வருமாறு :—

லண்டனில் கூடவிருக்கும் வட்டமேஜை மஹாநாட்டிற்குச்சென்று கலந்துகொள்ளவே நான் விரும்புகின்றேன். நான் எப்பொழுதும் சமாதானத்தையே விரும்புபவன் என்பதை எனது நண்பர் அறிவார்கள். ஆனால் இந்திய சிவில் உத்தியோகஸ்தர்கள் நான்லண்டன் செல்வதை விரும்பவில்லைபோ லிருக்கின்றது. குஜராத்துக் குடியானவர்களிடமிருந்து வரிவசூலிப்பதில் அவர்கள் டில்லி ஒப்பந்தத்திற்கு விரோதமாய்ச் செய்யும் காரியம் நியாய விரோதமானது. பிரிட்டனும் இந்தியாவும் நட்புடன் வாழவேண்டுமானால் இவ்வுத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்பைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் ஜனங்களது ஊழியர்கள் தாம் என்பதை மறந்துவிடுகின்றார்கள். மாகாண அரசாங்கத்தாரும், சிவில் உத்தியோகஸ்தர்களும் எத்தனையோவகையில் டில்லி ஒப்பந்தத்தை மீறி நடந்துள்ளார்கள். பொதுவான விசாரணைக் கோர்ட்டை அரசாங்கத்தார் நியமிப்பார்களேயானால், சிவில் உத்தியோகஸ்தர்களும் மாகாண அரசாங்கத்தார்களும் ஒப்பந்தவிரோதமாய் நடந்துகொண்டுள்ளதை நிரூபிக்கின்றேன். காங்கிரஸ்காரர்கள் ஒப்பந்தப்படி தான் நடந்துகொண்டிருக்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் நியாயமான விசாரணைக் கோர்ட்டில் விசாரணைக்குட்படத் தயாராக விருக்கின்றனர். இருதாரத்தாரையும் விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. இந்திய அரசாங்கத்தார் ஒரு சபையை உடனே நியமிக்கவேண்டும். இதைச்செய்ய அரசாங்கத்தார் மறுத்தால், இந்தியருக்குத் திருப்தி உண்டாகும்வகையில் அரசியல்திட்டத்தை அவர்இயற்றுவார் என்று எப்படி எண்ணுவது. இவ்வண்ணம் இந்தியாவில் காரியங்கள் நிகழ்ந்துள்ளதை அறிய என்னைப் போலவே லார்ட் இர்வினும் வருந்துவார் என்று எண்ணுகின்றேன். சிவில் உத்தியோகஸ்தர்கள் நான் லண்டன் செல்வதற்குத் தடையாக விருக்கின்றனர். அத்தடை விலகுமேல் நான் லண்டன் செல்வேன். இதைப் பிரிட்டிஷ் மஹாஜனங்கள் அறியுமாறு செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
தித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாடாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

மட சயவனப்ராசா மட பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடுபல்பொடி"

சாதாரணம்-பாக்கேட் ... கேட்-டப்பி

பிரான்ச: மதுரை. காஞ்சீபுரம்.

18893|
N31433

KALANILAYAM. Reg. No. M 2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

சாரதேவன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

- சோப்புகளில் ராஜா -

நாடறிந்தது நல்வரவேற்கப்படுவது : சிலாக்கியமானது :

டாக்டர் டிராலியின்

- லயன் சோப் -

பார்வைக்கு உன்னதமும், உயர்தரமும் ஆனது. அதேபோல் உழைப்பிலும் மேலான குணம் நிறைந்தது.

ஒரு கட்டியாவது இரு கட்டியுள்ள பெட்டியாவது வாங்குக.

- - எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் - -

Sole Agent:—
A. V. R. A. ADYCAPPA CHETTY,
52, Bunder Street, Madras.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)